# வல்வெட்டித்துறையிலிருந்து அமெரிக்கா வரை

# கப்பலோட்டிய தமிழர்கள்



115

910
ராஜ

ராஜகோபால்

# வல்வெட்டித்துறையிலிருந்து அமெரிக்கா வரை

# கப்பலோட்டிய தமிழர்கள்


கொழும்பு தமிழ்ச் சங்கம்

நூலகம்


ராஜகோபால்


26821



வெளியீடு:

கலை இலக்கிய பத்திரிகை நண்பர்கள்

233, ஸ்ரான்லி வீதி : யாழ்ப்பாணம்.

விலை ரூபா 10-00


- நூல்: வல்வெட்டித்துறையிலிருந்து அமெரிக்கா வரை கப்பலோட்டிய தமிழர்கள்
- ஆசிரியர்: ஈ. கே. ராஜகோபால்
- முதற்பதிப்பு: அக்டோபர் 1984
- ஓவியம்: லங்கா
- அச்சிட்டோர்: அபிராமி அச்சகம், 17B, ஜும்மா மொஸ்க் லேன், யாழ்ப்பாணம்.
- வெளியீடு: கலை இலக்கிய பத்திரிகை நண்பர்கள்.


# முன்னுரை

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து அறுபத்துமூன்று என எண்ணுகின்றேன்.

பள்ளிப் பையனொருவன் அரைக் காற்சட்டையுடன் 'ஈழநாடு' அலுவலகத்திற்கு வந்து ஒரு கடிதத்தை நீட்டுகின்றான். எனது முக்கிய நண்பர்களிலொருவரான தாழையடி சபாரத்தினம் கொடுத்த கடிதம் அது.

பிரித்துப் படிக்கின்றேன்.

'இக்கடிதம் தரும் தம்பி எழுத்துத்துறையில் பிரகாசிக்க விரும்புகிறார். அவருக்கு ஆதரவு அளிக்க வேண்டும்' என்று கடிதத்தில் 'தாழையடி' எழுதியிருந்தார்.

கடிதத்தைப் படித்து முடிக்கவும், இன்னொரு, என் வலப்பை நீட்டுகின்றான் பொடியன்.

அது ஒரு சிறுகதை.

பெயர் 'மொட்டை மரம்'.

அடுத்த வாரமே அந்தச் சிறுகதை ஈழநாடு வாரமலரில் வெளியானது.

விட்டானா பின்னே ?

நண்பர் தாழையடியின் சிபார்சைச் சரியானபடி பயன்படுத்திய திறமையை என்னவென்று சொல்வேன்.

சிறுகதை, கட்டுரை, கவிதை—

சிறுகதை, கட்டுரை, கவிதை—

இப்படியே மாறி மாறி அவன் ஆக்கங்கள் ஈழநாடு வாரமலரில் இடம்பெறலாயின.

என் நெஞ்சிலும் மெதுவாக இடம்பிடித்துக் கொண்ட அவன், வீட்டிலும் இடம் பிடித்துக் கொண்டான்.

'சபா அண்ணை, சபா அண்ணை' என்று தனது பதினைந்தாவது வயதில் என்னைச் சுற்றிக் கொண்டிருந்த அந்த குமாரசாமி ராஜகோபால் இன்று எனது நண்பர்.

நண்பர் மாத்திரமல்ல; பக்கத்தேயிருந்து பணியாற்றும் பத்திரிகையாளன்.

ராஜகோபாலனைப் பத்திரிகையாளனாக்கிய பெருமை ஆசீர்வாதம் மாஸ்டரையே சாரும். ராஜகோபால் 'விவேகி' சஞ்சிகையின் ஆசிரியரானார்!

ராஜகோபாலின் வேகத்திற்கு விவேகி ஈடுகொடுக்காது போகவே (விவேகி, திங்கள் ஏடு) சுறுசுறுப்பான 'ஈழநாடு' நாளேட்டில் அவர் நுழையலானார். சிலகாலம் ஈழநாடு வார மலருக்கு எனக்கு உதவியாயிருந்தபோது அவர் ஆற்றிய பணி அளப்பரியது. இயல்பாகவே சுறுசுறுப்புமிக்க இளைஞனான ராஜகோபால், வாரமலர் கலையரங்கம் பகுதியை மிக்க சுவை படச் செய்தார். கலைப்பகுதியுடன் மட்டும் நின்றாரில்லை. அவர் கைபடாத அம்சமே இல்லை எனலாம். பேட்டிக் கட்டுரை எழுதுவதற்கு 'நம்பர் வன்.'

செய்தி எடுப்பதிலும் செய்திகளைத் தயாரிப்பதிலும் அவர் தனித்துவம் பெற்றவர்.

எந்த எந்தச் செய்தியை எப்படி எப்படி வாசகர்களுக்கு வழங்கவேண்டுமென்ற வித்தை கைவரப் பெற்ற பத்திரிகையாளன் அவர்.

சில ஆண்டுகளின் முன் ஒரு நாள் அவர் எழுதிய ஒரு செய்தி, என்னை ஒரு பெண்ணைப்போல கேவிக்கேவி அழ வைத்து விட்டது. அந்தச் செய்தி, குறிப்பிட்ட சம்பவத்தை



என் நெஞ்சில் மிக இறுக்கமாகப் படம்பிடித்துவிட்டதால் இன்றும் கூட அதனை நினைக்கும்போது என் கண்கலங்கும். இரணைமடுக் குளத்தில் யாழ். திருக்குடும்பக் கன்னியர் மடத்தைச் சேர்ந்த அந்தப் பிஞ்சுப் பெண் பலியாகிவிட்டாள். கடைசியாக நீரின்மேலே அவளது ஒரு கையின் விரல்கள் மட்டும் தெரிகின்றன. இது அழியாத ஒரு காட்சியாக என் மனத்தில் பதிந்துவிட்டது அந்தச் செய்தியைப் படித்த அத்தனை பேரும் அந்தச் சின்னஞ்சிறிய பெண்ணின் ஆத்ம இளைப்பாற்றிக்காக நிச்சயம் வேண்டுதல் செய்திருப்பர்.

'கப்பல் ஓட்டிய தமிழன்' விஷயத்திலும் தம்பிப்பிள்ளைத் தண்டையல் நம்முன்னால் நின்று நம்முடன் பேசுவது போல இருக்கவில்லையா? வல்வெட்டித்துறையிலிருந்து அமெரிக்காவரை நீண்டு விரிந்து கிடக்கும் சமுத்திரத்தின்மீது 'அன்னபூரணி அம்மா'வில் நாம் பயணம் செய்வது போன்ற உணர்வு ஏற்படவில்லையா? இதெல்லாம் எதைக் காட்டுகின்றன? தனது கிராமமான வல்லுவெட்டியை அடுத்த வல்வெட்டித்துறையின் தமிழ் மகன் ஒருவன் இங்கிருந்து அமெரிக்காவுக்குக் கப்பல் வணிகம் செய்தான் என்ற பெருமைப் புளகாங்கிதத்தின் பிரதிபலிப்பை மட்டுமின்றி, எடுத்துக் கொண்ட விஷயத்தைக் கவர்ச்சிகரமாகக் கையாளும் திறமையையுமே காட்டுகின்றன.

ராஜகோபாலனின் எழுத்துத்திறமை தனித்துவமானது.

'அன்னபூரணி அம்மாள்' ஈழநாடு வாரமலரில் தொடர்ந்து வெளிவந்தபோது, அதனை எல்லாரும் ஆவலுடன் காத்திருந்து படித்தனர்.

நூலுருப் பெற்றதன் மூலம் 'அன்னபூரணி அம்மாள்' இன்று அழியாத சரித்திரமாகி விட்டாள்.

மேலும் பல சரித்திரங்களை ராஜகோபால் படைப்பாராக!

சு. சபாரத்தினம்
(சசிபாரதி)
ஆசிரியர்: ஈழநாடு-வாரமலர்

# என் பார்வையில் நூலாசிரியர்

எழுத்துலகில் ஏதாவது சாதித்துவிட வேண்டும் என்ற எண்ணத்துடன் முனைந்து செயல்படுகிறவர்களில் ராஜகோபாலையும் ஒருவராகக் காண்கிறேன் நான்.

நாடு, நகர், கிராமம் பட்டி தொட்டி என்று மனிதன் எங்கெங்கு வாழ்கின்றானோ அங்கெல்லாம் மனிதத்துவம் பரிணமிக்க வேண்டும் - அதற்காக பணிகளில் ஈடுபட்டுள்ளவர்களை அவர்கள் எப்படிப்பட்டவர்களானாலும் இனங்கண்டு வெளிப்படுத்திட வேண்டும் என்பதில் இவருக்கு ஆர்வம் மிகுதி. அந்த வகையிலேயே இவரது கட்டுரைகள் பேட்டிகள் போன்ற எழுத்துவடிவங்கள் அமைகின்றன.

முரண்பாடுகளுக்கிடையில் முற்போக்குச் சிந்தனையுடன் எழுதும் ராஜகோபால் ஒருவர்; இப்படியும் எழுதுவேன் எனக் கூறுவதுபோல் விரசபாணியில் வெழுத்துவாங்கும் ராஜகோபால் இன்னொருவர்

இந்த முரண்பட்ட இரண்டு ராஜகோபால்களையும் எடைபோட்டுப் பார்த்தால் முதலாமவர் மதிப்புக்கும் மரியாதைக்கும் அன்புக்கும் அரவணைப்புக்கும் உரியவராகிறார்.

அந்த ராஜகோபாலைத்தான் இந்தக் கட்டுரை நூலிலும் தரிசிக்கின்றோம்.

— பி. எஸ். பெருமாள்
(பதில் ஆசிரியர், ஈழநாடு)



# கலங்கரை வெளிச்சம்

“திரைகடலோடியும் திரவியம் தேடு” என்பது தமிழர்களுக்கான ஒரு தனிப்பழமொழி. “கப்பலோட்டிய தமிழன்” பரம்பரை இன்றைய தமிழர் பரம்பரை,

இந்தப் பரம்பரையின் வீரதீரச் செயல்களுக்குப் பல கதைகள் வாய்வழியாக வாழ்ந்து வருகின்றன. கொட்டும் மழையிலும், கொதிக்கும் வெயிலிலும், சுழற்றும் சூறாவளியிலும், கொந்தளிக்கும் கடலலைகளுடன் வீரவாழ்க்கை வாழும் தமிழரின் கதை தனித்துவமானது.

வாய்வழியாக வாழும் இந்தக் கதைகளை நம்மில் பலர் மற்றவர் கூறக் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால் புத்தகமாகப் படித்தது குறைவு; வெகு குறைவு.

அந்தக்குறையைப் போக்கியிருக்கிறார் என் இனிய நண்பர் ராஜகோபால்.

பத்திரிகையில் இக்கதை தொடர்கட்டுரையாக வெளிவந்தபோது, வாராவாரம் விழுந்து விழுந்து படித்தவர்களில் நானும் ஒருவன். ராஜகோபால் இலக்கியகாரனாகவும், சிறந்தொரு பத்திரிகைக்காரனாகவும் விளங்குவதால் விறுவிறுப்பான நாவல்போலக் கட்டுரை அமைந்திருப்பதைப் படிப்பவர்கள் உணர்வார்கள்.


தினகரன், ஈழநாடு பத்திரிகைகளின் உதவி ஆசிரியராக பணியாற்றிய அவர் பெற்ற அனுபவம், மக்களின் உணர்வுகளை அவர் அறியக் காரணமாக அமைந்தது, அந்த உந்தலால் எழுந்ததுவே இந்த நூலாகும்.

நீண்டகாலம் நிலைபெற்று வாழ்ந்து, நம்மவர்களின் வீர வாழ்க்கையைக் கலங்கரை வெளிச்சம் போல் பளிச்சிட்டுக் காட்டும் 'வல்வெட்டித் துறையிலிருந்து அமெரிக்காவரை கப்பலோட்டிய தமிழர்கள்' நூல் விளங்கும் என்பது திண்ணம். நண்பர் ராஜகோபாலின் நுண்ணிய பேனாவின் வலிமையே இதற்குச் சான்று.

இந்நூலை 'கலைஇலக்கிய பத்திரிகை நண்பர்கள்' வெளியீடாக உங்கள் முன் சமர்ப்பிக்கின்றோம். ராஜகோபாலனின் வேறுபல ஆக்கங்களும் நூலுருப் பெற இந்நூல்வழி அமைத்துக் கொடுக்கும்

**ஊஸ். திருச்செல்வம்**
செயலாளர்
'கலை இலக்கிய பத்திரிகை நண்பர்கள்'

215, R/3/9 - பார்க் வீதி,
கொழும்பு - 5
27-09-1984



வேட்டி கட்டிய இலங்கைத் தமிழர்களைப் பார்க்க அமெரிக்கர்கள் அன்று திரண்டிருந்தார்கள்!

அமெரிக்காவின் பிரசித்திவாய்ந்த 'குளோசெஸ்ரர்' துறைமுகத்தில் திரண்டிருந்த அமெரிக்க மக்கள்,

அவர்களை விசித்திரமாகப்பார்த்தார்கள்!

அமெரிக்கப் பத்திரிகை நிருபர்களுக்குச் 'சுடச்சுட' நல்ல செய்தி!

"அமெரிக்கா வந்துள்ள இலங்கையின் முதல் உத்தியோகப் பற்றற்ற தூதுவர்கள்"

— இவ்வாறு நியூயார்க்கிலிருந்து வெளியாகிக்கொண்டிருந்த 'போஸ்ரன் குளோப்' என்ற தினசரி எழுதியது.

இத்தனைக்கும்—

அவர்கள் என்ன செய்தார்கள்?

நினைத்துக்கூடப் பார்க்க முடியவில்லை—

ஆழ்கடலில் சாகசப் பயணம் நிகழ்த்திய அந்த வரலாற்று நாயகர்களுடைய தீரக்கதையை, சரித்திரம்தான் சில சமயம் மறந்தாலும், ஆண்டாண்டு காலம் சென்றாலும், ஓயாது ஓலமிட்டுக் கொண்டிருக்கும் கடல் அன்னை மறக்க மாட்டாள்!

நெஞ்சு சிலிர்க்கிறது!

அமெரிக்காவில் அன்று ராஜாங்க மரியாதையுடன் வரவேற்கப்பட்டவர்கள்.

இலங்கையின் வடக்குக் கரையோரப் பகுதியான வல்வெட்டித்துறை என்ற சிற்றூரில் பிறந்தவர்களே!

சிற்றூரில் பிறந்தவர்களாயினும்—

பிறந்த ஊரின் பெருமையையும், பெற்ற நாட்டின் மதிப்பையும் உலகறியச் செய்து விட்டார்கள்!

இன்று கூட,

வளர்ந்துவிட்ட விஞ்ஞானயுகத்திலும், வங்காள விரிகுடாவில்—

மிகச் சக்தி வாய்ந்த நவீன ராட்சதக் கப்பல்களும், நீர்மூழ்கிக் கப்பல்களும் பெரும் பெரும் அபாயங்களுக்குள்ளாகிக் கடலோடு சங்கமித்து விடுகின்றன.

கோடிக்கணக்கான ரூபா செலவில், நவீன யந்திரங்களைக் கொண்டு உருவாக்கப்படுகின்றன இப்போதைய கப்பல்கள்!

ஆனால்—

1930-ஆம் ஆண்டில், உள்ளூர் வேப்பமரத்தில், வல்வெட்டித்துறை சுந்தர மேஸ்திரியாரினால் அழகுற அமைக்கப்பட்ட இரட்டைப் பாய்மரக்கப்பலில்,



அந்தப் பெருங்கடலினுள் கப்பல் விட்டு வெற்றிப் பயணம் நடாத்தியிருக்கிறார்கள்—

வல்வெட்டித்துறைச் சிங்கங்கள்!

அத்திலாந்திச் சமுத்திரத்தில் அடலேறுகளாகப் பவனி வந்த 'கதை' ஒருவரலாறு!

ஆம்,

ஒரு சரித்திரம் என்று கூடச்சொல்லலாம்!

கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டு பிடித்தது ஒரு சரித்திரமென்றால்,

மனிதன் அம்புலித்தரையில் காலடி வைத்தது ஒரு சாதனையென்றால்,

இதுவும் ஒரு சரித்திரம்தான்!

இன்று புதுப் புதுச் சாதனைகள்.

பத்திரிகைகளைத் திறந்ததும், 'சாதனை, சாதனை' என்ற செய்திகள், பாராட்டுகள்!

ஆனால்—

இவற்றையெல்லாம் தூக்கியடித்து விடுவது போல, 'சாதனைகளுக்கே சவால்விடும் சாதனைகளைச் செய்வோம்' என்று வல்வெட்டித்துறையின் கடந்த காலம் சொல்லாமல் சொல்லுகிறது!

—மாலுமி சாஸ்திரத்தை முற்றுமுழுதாகக் கரைத்துக் குடித்தவர்கள்!

—வான சாஸ்திரத்தைக் கற்றுத்தெளிந்தவர்கள்!

ஆழ்கடலை வெற்றி கொண்டு கடலோடுவதில் 'தனிக் காட்டுராஜா'க்களாக வல்வெட்டிதுறைக் கடலோடிகள் திகழ்ந்தனர்!

இந்திய மன்னர்கள் வல்வைக் கப்பலோட்டிகளைக் கௌரவித்தனர்!

இன்று நேற்றல்ல—

எழுநூறு ஆண்டுகளுக்கு முன்னர் இந்தக் கௌரவத்தைப் பெற்றனர்!

அப்பொழுதே ஆழ்கடலில் தாம் கட்டிய கனமிகு கப்பல்களைக் கடலோடவிட்டார்கள்!

இந்திய மன்னர்கள் மட்டுமல்ல,
ஒல்லாந்தரும்,
போர்த்துக்கீயரும்,
பிரித்தானியரும்,

வல்வெட்டித்துறைக் கடலோடிகளுக்குத் தனிமதிப்பளித்தார்கள்!

முதலாம் மகாயுத்தத்துக்கு முன்னர்—
இந்தியாவுக்கும்,
மலாயாவுக்கும்,
பர்மாவுக்கும்,

பாய்மரக்கப்பல்கள் வல்வெட்டித்துறை துறைமுகத்திலிருந்து படைபடையாகச் சென்று வந்தன!

இரண்டாம் மகாயுத்தம் வரை இது தொடர்ந்தது.

அரிசியும், நெல்லும், முத்துச்சம்பாவும், கறிச்சரக்கும் அங்கெல்லாம் சென்று ஏற்றிக்கொண்டு வந்து நமது கஷ்டத்தைத் தீர்த்த பெருமை வல்வெட்டித்துறைக் கடலோடிகளைச்சாரும்.

அதிராம் பட்டினம்,
நாகபட்டினம்,
காக்கிநாடா,
கல்கத்தா,
சிட்டகொங்,




ரங்கூன்,

பினாங்கு,

போன்ற இடங்களிலெல்லாம் வல்வெட்டித்துறைக் கப்பலோட்டிகள் கப்பல் செலுத்திய 'கதைகள்,'

ஏராளம்! ஏராளம்!!




வல்வெட்டித்துறை துறைமுகத்தில் இரண்டாம் மகா யுத்தத்துக்கு முன்பாக சுமார் அறுபது பெரிய பாய்மரக் கப்பல்கள் இயங்கிக் கொண்டிருந்தன.

மூவாயிரத்திலிருந்து பதினாறாயிரம் வரையான மூடைகள் ஏற்றக்கூடிய பெரும், பெரும் பாய்மரக் கப்பல்கள் திரைகடலோடி வாணிபம் செய்து கொண்டிருந்தன.

அந்தக் கப்பல்களில், தண்டையல்களாக இருந்தவர்கள், முழுக்க முழுக்க வல்வெட்டித்துறை வாசிகள் தான்!

கப்பல் செலுத்துவதில் நன்கு அனுபவம் பெற்று, மாலுமிசாஸ்திரத்தை கற்றுத் தெரிந்தவர்களையே தண்டையல்கள் என்று அழைத்தார்கள்!

கப்பலொன்றின் காப்டனுக்கு நிகரானவர்கள்.

தண்டையல் என்றால் எப்படி இருப்பார் என்பதை விளக்க ஒரு உதாரணம்—

வல்வெட்டித்துறைத் தண்டையல்களில் ஒரு காலத்தில் கொடிகட்டிப் பறந்தவர்—

நாராயணபிள்ளைத் தண்டையல்!

பர்மாக்காரனுக்குச் சொந்தமான பாய்மரக் கப்பலில், அவர் அப்போது தண்டையல்!

இந்தப் பெரிய கப்பலில், இருபத்திநான்கு பர்மாக்காரர்கள், இவருக்குக் கீழே கடலோடிகளாக வேலை செய்து கொண்டிருந்தார்கள்!

தமிழர் ஒருவர் மட்டும் உதவியாளராக இருந்தார்; கணக்குப் பார்ப்பதற்கு ஒரு சீன இளைஞர்!

பினாங்குக்குக் கப்பலைச் செலுத்திக் கொண்டிருந்தார் நாராயணபிள்ளை!

பதினாறுவது மைல் தூரத்தில், ஒரு மணல் திட்டு—

கப்பல் தரைதட்டி விட்டது! நங்கூர மிடப்பட்டது!

கப்பல் புறப்படுவது முதல், கடலோடிகளின் கடமைகள் வரையான சகல விஷயங்களும் தண்டையலின் உத்தரவின் பேரில்தான் நடக்கவேண்டும்.

திடீரென்று,



நங்கூரமிடப்பட்ட தனது கப்பல் புறப்படுவதற்கு ஆயத்தமாக நங்கூரம் எடுக்கப்பட்ட விபரத்தைத் தெரிந்து கொண்டார்.

அவருக்குக் கீழ்பணியாற்றும் நேரடி ஊழியனான பர்மாக்காரன் ஒருவன் நங்கூரத்தை அகற்றியதைத் தெரிந்து கொண்டார்.

ஆத்திரம் பொத்தென்று வந்தது தண்டையலுக்கு!

அடுத்த வினாடி—

நங்கூரத்தை மீண்டும் போடும்படி உத்தரவு பிறப்பித்தார் தண்டையல்.

குறித்த பர்மாக்காரனை உடனடியாகக் கரையில் கொண்டு போய் விட்டுவரும்படி கட்டளையிட்டார்!

கப்பலினுள்ளே இருந்த சிறிய படகொன்று வெளியே எடுக்கப்பட்டுக் கடலில் மிதந்தது!

இருபத்திமூன்று பர்மாக்காரர்களும் ஒரு வார்த்தை கூடப்பேசவில்லை.

கப்பல் கட்டுவதிலும், கப்பலோட்டுவதிலும் வல்வெட்டித்துறை மக்கள் சிறப்பு மிக்கவர்கள் என்பதைப் பலவெளிநாடுகளே ஒப்புக்கொண்டுள்ளன.

இந்தியா,
பர்மா,
பாகிஸ்தான்,
மலேயா,
இந்தோனேஷியா,
அரேபியா,

போன்ற நாடுகள் வல்வெட்டித்துறையின் கீர்த்தியை அங்கீகரித்துள்ளன.

ஆதார பூர்வமாகவே இதனைக்குறிப்பிடுகிறேன்.

உலகத்தின் எந்த ஒரு நாட்டிலும் கட்டப்பட்ட கப்பலையும், 'லோயிட்ஸ்' உலக ஸ்தாபனத்தில் அப்போது பதிவு செய்ய வேண்டும்.

வல்வெட்டித்துறையில் கட்டப்பட்ட கப்பல்கள் எல்லாமே அந்தந்தக்காலத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன

வல்வெட்டித்துறை ஒரு விசேஷ துறைமுகமாவும் கப்பல் கட்டும் தளமாகவும், கடலோடிகள் வசிப்பிடமாக வும், 'வே ஒவ் பெங்கோல் பைலட்' என்ற நூலில் குறிப் பிடப்பட்டுள்ளது.

இந்த நூலின் பிரதிகள் கொழும்பு 'சிப்பிங்' அலு வலகத்திலும், துறைமுக அதிகார அலுவலகத்திலும், சுங்க இலாகாத் தலைமைப்பீடத்திலும் இன்னும் இருக்கின்றன.

**'அ**த்திலாந்திக் கிங்!'

பன்னீராயிரம் தொன் எடையுள்ள கப்பல்.

ஆங்கிலேய வர்த்தக நிறுவனமொன்றுக்குச் சொந்த மான பெரிய கப்பல்.

சாமான்களை ஏற்றிக்கொண்டு வந்தபோது,

திடீரென்று,

திருகோணமலைத் துறைமுகத்துக்குச் சமீபமாக மூழ்கி விட்டது!

மீட்கமுயன்ற அக்கப்பல் ஊழியர்களும், உரிமையா ளரும் மனம் தளர்ந்தனர்!

அந்த நேரத்தில்—

கைகொடுத்து உதவினர், வல்வெட்டித்துறைக் கப் பல் உரிமையாளர் ஒருவர்!



கப்பல் கட்டும் கலையிலும், மாலுமி சாஸ்திரத்திலும், வான சாஸ்திரத்திலும், அறிவும் ஆற்றலும் பெற்ற வெங் கடாசலம் என்ற அவர் மூழ்கிய நிலையிலேயே கப்பலை விலை கொடுத்து வாங்கினர்!

எவர்தான் இப்படித்துணிந்து மூழ்கிய கப்பலை விலை கொடுத்து வாங்குவார்கள்?

ஆங்கிலேயனுல் மீட்கமுடியாது மூழ்கிய அந்தப் பென்னும் பெரிய ராட்சதக் கப்பலை வல்வெட்டித்துறை யான் மீட்டு, மிதக்கவிட்டு, அலைகடலின் நடுவே அதனை மீண்டும் ஓடவிட்டான்.

— நூறு ஆண்டுகளுக்கு முன்னர் நடந்த சம்பவம்.

கப்பலோட்டிய வல்வெட்டித்துறைத் தமிழன் வீரத் துக்கு இப்படி எத்தனையோ 'சாம்பிள்'கள்!

**வ**ல்வெட்டித்துறை!

இந்தப் பெயர் எப்படி வந்தது?

ரோமுக்கும்,

கிரேக்கத்துக்கும்,

எகிப்துக்கும்,

இந்தத்துறைமுகங்களிலிருந்து 'வெல்வெட்' என்ற பட்டு ஏற்றுமதி செய்யப்பட்ட காலத்துக்குப்பிறகு இப் பெயர் சூட்டப்பட்டதாகச் சொல்லப்படுகிறது!

வேறு நாடுகளிலிருந்து கொண்டுவரப்பட்ட இந்த 'வெல்வெட்', வல்வெட்டித்துறைக்களஞ்சியங்களில் நிறைத்து வைக்கப்பட்டு ரோம், எகிப்து, கிரேக்கம் ஆகிய நாடுகளுக்கு அனுப்பப்பட்டனவாம்.

தரமான 'வெல்வெட்' டை எடுத்துக் கொண்டு வருவதில் கைவரப் பெற்றவர்களாக விளங்கினார்கள்!

'வெல்வெட்'டுக்குப் பேர் போன இடமாக இவ்விடம் திகழ்ந்ததனால், 'வெல்வெட்டித்துறை' என அழைக்கப்பட்டு, நாளடைவில் வல்வெட்டித்துறை எனப் பெயர் பெற்றதாகக் கூறப்படுகிறது!

ஏதோ ஓர் உண்மை இருக்கத்தான் செய்கிறது.




பாஸ்போர்ட் எடுக்க வேண்டும். விசா எடுக்க வேண்டும். விமானத்தில் ஏறிக்குந்த வேண்டும். அமெரிக்கா போய்ச் சேர்ந்து விடலாம்!

'அமெரிக்காவுக்கு எப்படிப் போகலாம்?' என்று யாராவது கேட்டால், இப்படித்தான் என்னால் பதில் சொல்லமுடியும்.



ஆனால், பாய்மரக் கப்பலிலே அமெரிக்காவுக்குச் சென்ற பயணக்கதையைக் கேட்கக் கேட்க, எனது தேகமெல்லாம் புல்லரித்தது!

இந்தப் பயணக்கதையை எழுதுவதற்காக அந்தப் பாய்மரக்கப்பலில் சாகசப் பயணம் நடாத்திய சிலரைச் சந்தித்து பல நாட்கள் பேசினேன்.

சிலர் இன்று உயிரோடில்லை; ஆனாலும் அவர்களுடைய வீரசாகசங்களைக் கேட்டறிந்து கொண்டேன்.

வளரும் பயிரை முளையில் தெரியும் என்பார்கள்.

அந்த மனிதன் வாழ்க்கையைப் பொறுத்தவரையில் இது நூற்றுக்கு நூறு உண்மைதான்!

கடலோடும் கலையில் வல்வெட்டித்துறையில் முன்னோடியாகத் திகழ்ந்தவர்களில் ஒருவரான புண்ணியமூர்த்தித் தண்டையலுக்கு அதிராம் பட்டின கப்பல் முதலாளியிடமிருந்து அழைப்பு வந்தது!

கப்பலோட்டி, பொருள் ஈட்டித்தரவல்லவர்கள் வல்வெட்டித்துறைத் தண்டையல்கள் என்பதைத் தென்னிந்திய கப்பல் முதலாளிகள் நன்கு தெரிந்து வைத்திருந்தார்கள்!

புண்ணியமூர்த்தித் தண்டையல் ஊர்காவற்றுறையிலிருந்து தோணியொன்றில் தான் அதிராம் பட்டினத்துக்குச் சென்றார்.

முப்பது அல்லது நாற்பது மைல்களுக்கு இடைப்பட்ட தூரம்தான்,

ஊர்காவற்றுறையிலிருந்து தென்னிந்தியாவிலுள்ள அதிராம்பட்டினம்,

— குஞ்செயப்பு, மாமன் வீட்டுக்குப் போய் வருவது மாதிரித்தான் வல்வெட்டித்துறைக் கடலோடிகளுக்குத் தென்னிந்தியா.

புண்ணியமூர்த்தித் தண்டையல் அதிராம் பட்டினம் நோக்கித் தோணியில் சென்றுகொண்டிருந்தபோது, அந்தத் தோணியில், ஒன்பது வயது கூட ஆகாத சிறுவன் ஒருவனும் இருந்தான்!

ஆழ்கடலில் போய்க்கொண்டிருக்கிறோமே என்ற சிறி தளவு பயம் கூட இல்லாமல், குமுறும் அலைகளைக்கிழித்துக் கொண்டு, அசைந்து அசைந்து பேரிரைச்சலுக்கிடையே செல்லும் தோணிக்குள் இருந்த அச்சிறுவன் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தான்!

தண்டையலுக்கு அச்சிறுவன் மருமகன்!

ஒரு காலத்தில் பாய்மரக்கப்பலில் வல்வெட்டித்துறை யிலிருந்து அமெரிக்காவுக்குச் அச்சிறுவன் சாதனைப்பயணம் செய்வான் என்று எவருக்குத்தான் தெரியும்? 1919ம் ஆண் டில் இச்சம்பவம் நடந்தது!

'முளையில் தெரிந்த' அச்சிறுவன் இரத்தினசாமியும் பாய்மரக்கப்பலில் அமெரிக்காவுக்குச் சென்ற கடலோடி களில் ஒருவர்.

ஐயாத்துரை இரத்தினசாமியை வல்வெட்டித்துறை 'வித்தனை' என்ற இடத்திலுள்ள அவரது இல்லத்தில் சந்தித்தேன்.

நான் சந்தித்தது ஒன்பது ஆண்டுகளுக்கு முன்னர் இப்போது அவருக்கு வயது 74.

வேட்டிகட்டியிருந்தார். வெறும் மேலுடன் இருந் அவரது தோற்றமும் பேச்சும் துணிச்சல் காரராக இருக் வேண்டுமென்பதை எடுத்த எடுப்பிலே காட்டி விட்டன!



தனது மாமா புண்ணியமூர்த்தித் தண்டையலுடன் சேர்ந்து, தான் கடலோடு விளையாட ஆரம்பித்த நினைவுகளை ஒன்பது வயதிலிருந்து சொல்லத்தொடங்கினார்:

''அதிராம் பட்டினத்தில் கப்பலை முதலாளியிடமிருந்து பொறுப்பேற்றுக் கொண்ட எனது மாமா அங்கிருந்து பிடி கரணையும், அண்ணமலை வெள்ளை அழகான நாம்பன் மாடு கள் நூறு அளவிலும் ஏற்றிக்கொண்டு ஊர்காவற்றுறை நோக்கி வந்தார்.........

''மூகமட் ஹாஜி' தான் அந்தக்கப்பலின் பெயர்.

'' முஸ்லிம் முதலாளிக்குச் சொந்தமான கப்பல்.

'' சமையல் செய்கிறவருக்கு உதவியாக 'எடுபிடி' வேலை செய்து கொடுப்பேன்.

'' பதினொராவது வயதில் எனது மாமாவுடன் கோக் கோ நாடாவுக்குச் சென்று வந்த நினைவுகள் என் மனத் திரையில் இப்போதும் பளிச்சிடுகின்றன.

'' கச்சான், எள்ளு, கடலை போன்றவற்றை கோக்கோ நாடாவிலிருந்து ஏற்றிக் கொண்டு கப்பல் திரும்பும்.

'' ஊர்காவற்றுறை, காங்கேசன்துறை, வல்வெட்டித் துறை, பருத்தித்துறை ஆகிய துறைகளில் கொண்டுவந்த பொருட்களை இறக்குவோம்.

''படிக்காமல், கடலோடித்திரிவதிலேயே அர்வமாக இருந்த என்னைக் கெட்டு ஒழிந்து போகப் போகிறேனே என்று சொல்லி வல்வெட்டித்துறை சிதம்பரக் கல்லூரி யில் படிக்க விட்டார்கள்.

''பன்னிரண்டாவது வயதில் படிக்கத் தொடங்கினேன்.

நூலகம்

'' நன்ருக ஞாபகமிருக்கிறது.

1929-ஆம் ஆண்டு—

'' அப்போது எனக்கு இருபத்தொரு வயது.

'' படிப்புக்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டு மலேயாவுக்குப் போய்விட்டேன்.

'' வேலே தேடினேன் அங்கு! என் பொல்லாத காலம், அங்கு ஆட்குறைப்பு நடந்து கொண்டிருந்தது.

'' மூன்றுவருடம் எப்படியோ அங்கு காலத்தைப் போக்கிவிட்டு, வீடு நோக்கி ஓடிவந்தேன்!

'' வல்வெட்டித்துறைக்குத்தான்!

'' மீண்டும் கப்பல் என்னே அழைத்தது.

'' என்னேக் கடலோடியாக்கிக் கொள்ள முடிவு செய்தேன்.

'' மலபார், கொச்சிக்குப் பயணம் தொடர்ந்தது.

'' இங்கிருந்து புகையிலே கொண்டு செல்வோம். கள்ளிக் கோட்டிலிருந்து ஓடுகளேக் கொண்டுவருவோம்''... ...

— இரத்தினசாமி பழைய சம்பவங்களே ஒன்றன் பின் ஒன்ருக இரை மீட்டிக்கொண்டிருந்தார்.

எப்படியோ—

கடலில் மிதந்து உலகத்தைச் சுற்றிப் பார்த்து விடவேண்டு மென்ற ஒரு லட்சியம் அவர் அடிமனத்தில் பசுமரத்தாணிபோல் பதிந்து விட்டது!

ஜெர்மனியர் ஒருவருடன் அவரது நவீன 'பிளாஸ்டிக்' வள்ளத்தில், அவருக்கு உதவியாக இருந்து உலகத்தையே சுற்றத் தயாரானபோது தனது உறவினர் ஒருவர் தடுத்து நிறுத்திய சம்பவத்தை இரத்தினசாமி இன்னமும் மறக்காமல் சொல்கிருர்.



திருமலேத் துறைமுகத்துக்கு ஒஸ்கார்ஸ்ஸக் என்ற ஜெர்மனியர் வள்ளத்தில் வந்து சேர்ந்தார்!

அவர் திரும்பிச் செல்லும் போது தனக்கு உதவியாக ஒருவரைக் கூட்டிச் செல்ல விரும்பினர்.

இரத்தினசாமிக்கு அவரது நட்புக் கிடைத்தது.

இரத்தினசாமியின் துடிப்பு ஜெர்மனியருக்குப் பிடித்து விட்டது.!

அவருடன் போவதற்கு எல்லாமே தயார். கடைசி நேரத்தில் இரத்தினசாமியை அவரது உறவினர் ஒருவர் தடுத்து நிறுத்தி விட்டார்.

1936-ம் ஆண்டு இந்தச் சந்தர்ப்பத்தை அவர் இழந்தார்— இந்தக் கவலே அவரைச் சிறிது நாட்கள் பெரிதும் வாட்டியது!

எப்படியாவது, கப்பலில் உலகம் சுற்றியே தீருவதென்ற முடிவுக்கு வந்தார்!

ஆனுலும், இவ்வளவு விரைவாக அந்தச் சந்தர்ப்பம் தனக்கு வரும் என்று இரத்தினசாமி நினேத்திருக்கவில்லே!



அன்னபூரணியின் அழகில் அந்த அமெரிக்கர் சொக்கியே போய் விட்டார்!

எடுப்பாகவும் கவர்ச்சியாகவும் இருந்த அன்னபூரணியின் அழகில் யார்தான் மயங்கமாட்டார்கள்!

அமெரிக்காவிலிருந்து இலங்கைக்கு வந்திருந்த கோடீஸ்வரரான எழுத்தாளரும் கடலோடியுமான வில்லியம் அல்பேர்ட் றொபின்சன் 1936 ஆம் ஆண்டுப்பிற்பகுதியில் வல்வெட்டித்துறைத் துறைமுகத்துக்கு விஜயம் செய்தார்.

வல்வெட்டித்துறைத் துறைமுகத்தில் அடுக்கடுக்காக நங்கூரமிட்டபடி ஐம்பது அறுபது கப்பல்கள் நிமிர்ந்து கம்பீரமாக நின்று கொண்டிருந்தன.

ஒவ்வொரு கப்பலையும் மிக நுணுக்கமாகப் பார்த்துக் கொண்டே சென்றார் றொபின்சன்!



ஓர் இடத்தில் அந்த மனிதர் நின்று விட்டார்!

அந்தக் கப்பலின் அழகை அணுவணுவாக ரசித்தார்!

அவள்தான் 'அன்னபூரணி'!

'அன்னபூரணி' என்று சுருக்கி விட்டேன்; 'அன்னபூரணி அம்மாள்' என்றே பெயரிட்டிருந்தார்கள்!

அன்னபூரணியைத் தனதாக்க வேண்டுமென்ற ஆசை அவருக்கு வந்து விட்டது!

—நினைத்ததை முடிப்பவர் அவர்!

எப்படியாவது அக்கப்பலை வாங்கி விடுவதெனத் தீர்மானித்து விட்டார். அத்தோடு இன்னொரு முடிவையும் அவர் எடுத்துக் கொண்டு விட்டார்!

'அக்கப்பலை அமெரிக்காவுக்குக் கொண்டு செல்ல வேண்டும்!'

அந்தக் கப்பலின் தண்டையல் கே. தம்பிப்பிள்ளையை றொபின்சன் சந்தித்துப் பேசினார்.

தம்பிப்பிள்ளைத் தண்டையல் மிகக் கண்டிப்பான பேர் வழி!

எவருக்கும் மசிந்து கொடுத்து விடமாட்டார்!

தனக்குச் சரியெனப்பட்டதைச் செய்வார்

றொபின்சனும் அமெரிக்கச் செல்வச் சீமான்களில் ஒருவராக மட்டுமல்லாது, கடலோடும் கலையில் முடிசூடா மன்னனாகவும் திகழ்ந்தவர்!

பசுபிக் சமுத்திரத்தில் மணல்திட்டு ஒன்றைக் கண்டு பிடித்து, அங்கு தன் காலடியைப் பதித்து, அமெரிக்க அரசின் பல்லாயிரக்கணக்கான ரூபாய்களை அதற்காகப் பரிசாகப் பெற்றவர்!

—கொடுக்கிற தெய்வம் கூரையைப் பிய்த்துக் கொண்டு கொடுக்கும் என்பார்கள்!

றொபின்சனின் கடலோடும் ஆற்றலில் மயங்கி அவர் காலடியில் விழுந்த புளொறின் என்ற சீமாட்டிமூலமும் அவருக்கு மேலும் செல்வம் குவிந்தது.

'அன்னபூரணி அம்மாளை' வாங்கித் தரும்படி விடாப்பிடியாகத் நின்றார் றொபின்சன்!

தம்பிப்பிள்ளைத் தண்டையல் கையை விரித்து விட்டார்!

வல்வெட்டித்துறையில் கட்டப்பட்ட கப்பல் தான் 'அன்னபூரணி'

கப்பல் கட்டும் தொழிலில் அகில உலகமே வியக்கக் கூடிய முறையில், மிகமிக நுண்ணிய வேலைகளைச் செய்வதில் அப்போது வல்வெட்டித்துறையில் உள்ளவர்கள் வல்லுநர்களாக விளங்கினார்கள்!

—இதனை வெளிநாட்டவர்களே ஒப்புக் கொண்டிருக்கிறார்கள்!

அகில உலகிலுமே பிரான்ஸுக்கு அடுத்தபடியாக கப்பல் கட்டும் தொழிலை வியக்கும் வண்ணம் செய்பவர்கள் வல்வெட்டித்துறைக் கலைஞர்கள்தான் என்பதை றொபின்சன், அன்னபூரணிமூலம் முற்றும் முழுதாகத் தெரிந்து கொண்டார்!

'அன்னபூரணி' மீது ஏற்பட்ட காதலை இது மேலும் வளர்த்து றொபின்சனைப் பைத்தியமாக்கிவிட்டது!

வல்வெட்டித்துறை சுந்தர மேஸ்திரியாரின் திறமைக்குச் சான்று கூறிக்கொண்டிருந்தது 'அன்னபூரணி'!



பசுபிக் சமுத்திரத்தின் தெற்கே—

பனி உறையும் பிரதேசப் பகுதியில், திமிங்கிலத்தைப் பிடித்து, அதன் மூலம் பெரிய வியாபாரம் ஒன்றினை நடாத்த வேண்டுமென்ற ஆசையொன்றும் நீண்டகாலமாக றொபின்சனின் நெஞ்சை வாட்டிக் கொண்டிருந்தது!

கடல்படு திரவியங்களில் முன்னணி வகிப்பது திமிங்கிலம்!

அந்தக் கனவுக்கு 'அன்னபூரணி' ஈடுகொடுப்பாள் என்ற அசையாத நம்பிக்கை றொபின்சனுக்கு ஏற்பட்டு விட்டது!

வல்வெட்டித்துறையில் அப்போது, கப்பல் சம்பந்தமான விஷயங்களில் முக்கிய பேர்வழியாகத் திகழ்ந்தவர் கதிரவேலுப்பிள்ளை என்பவர்!

பெரிய கப்பலை வாங்குவதற்கோ விற்பதற்கோ விரும்புபவர்கள் கதிரவேலுப்பிள்ளையை அணுகியே தீர வேண்டும்!

—அந்த அளவுக்கு ஒரு பெரிய 'புள்ளி'!

அமெரிக்கச் செல்வச்சீமான் றொபின்சனுக்கும் 'அன்னபூரணியை' வாங்குவதற்கு ஒரேஒரு வழிதான் இருந்தது!

கதிரவேலுப்பிள்ளையை றொபின்சன் சந்தித்தார்!

அன்னபூரணியை எப்படியாவது வாங்கித்தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்!

தேவகோட்டையிலுள்ள நாகப்பச் செட்டியாருக்குச் சொந்தமான அந்தக்கப்பல் பற்றிப் பேசுவதற்கு அங்கேயே செல்ல வேண்டுமென்று கூறினார் கதிரவேலுப்பிள்ளை,

ரொபின்சன் ஒப்புக்கொண்டார்!

கதிரவேலுப்பிள்ளை ரொபின்சனை அழைத்துக்கொண்டு தேவ கோட்டைக்குச் சென்றார்!

கப்பல் ஒன்றைப் பேரம்பேசி வாங்கிக் கொடுப்பதும் விற்றுக் கொடுப்பதும் ஒரு 'கலை' என்றே சொல்லலாம்!

அந்தக் 'கலை' கதிரவேலுப்பிள்ளைக்குக் கை வந்த கலை!

நாகப்பச் செட்டியாருக்கு கதிரவேலுப்பிள்ளையை நன்கு தெரியும்.

கப்பல் முதலாளிகள் எல்லாருமே கதிரவேலுப்பிள்ளையை மிக நன்கு அறிந்து வைத்திருந்தார்கள்!

'அன்னபூரணி'யை நல்லவிலைக்குக் கொடுக்கக் கூடிய சந்தர்ப்பம் வந்துள்ளதை நாகப்பச்செட்டியாருக்கு 'காதோடுகாதாக' விளக்கினார் கதிரவேலுப்பிள்ளை.

கதிரவேலுப்பிள்ளையின் கண்ணும் பேசும், கையும் பேசும்! என்பார்கள்.

அறுபதினாயிரம் ரூபாய்க்குக் கப்பலை விற்பதற்குச் சம்மதித்தார் நாகப்பச்செட்டியார்!

கதிரவேலுப்பிள்ளை ரொபின்சனுக்கு இலகுவாகக் காரியத்தை முடித்துக் கொடுத்து விட்டார்!

— அன்னபூரணி அம்மாள் ரொபின்சனுக்குச் சொந்தமாகி விட்டடாள்!






சுந்தர மேஸ்திரியாரினால் கட்டப்பட்ட வல்வெட்டித்துறை 'அன்னபூரணி' அமெரிக்கா போகப் போகிறாள் என்ற சங்கதி பரவலாக எங்கும் அடிபடத் தொடங்கியது!

இந்தச் செய்தி—

கடலில் உலகம் சுற்றத் துடித்துக் கொண்டிருந்த இளைஞன் இரத்தினசாமிக்குத் தேனாக இனித்தது!

அந்தக் கப்பலில் தானும் ஓர் ஊழியனாகச் சேர்ந்து கொள்வதென்று தீர்மானித்து விட்டார்!

கப்பலை வாங்கிய ரொபின்சனுக்கு, அவரது கொழும்பு முகவரிக்குத் தன்னைப்பற்றியும், தன் அனுபவத்தைப் பற்றியும் குறிப்பிட்டுக் கடிதம் எழுதினார்.

—தன்னைக் கடலோடியாகச் சேர்த்துக் கொள்ளும்படி விண்ணப்பித்தார்.

பதில் இல்லை.

சளைக்காத இரத்தினசாமி மீண்டும் கடிதம் எழுதினார்

பதில் இல்லை.

லேசாக விட்டுவிடுபவரா இரத்தினசாமி?

கொழும்புக்குப் போனார்; ரொபின்சனைச் சந்தித்தார்!

முன்னர் விண்ணப்பித்த விபரங்களையும், தனது விருப்பத்தையும் தெரிவித்தார்.

நிறைந்தளவு வேலைக்குள் பதில் எழுதுவது முடிந்த காரியமா என்று கேட்டார் ரொபின்சன்.

சில நிமிட நேரங்கள் இரத்தினசாமியுடன் பேசினார்.

இரத்தினசாமியைப் பிடித்து விட்டது!

'அன்னபூரணி'யில் அவரும் அமெரிக்காவுக்குச் செல்வது உறுதியாகிவிட்டது!

வல்வெட்டித்துறையில் அன்னபூரணிப் பாய்மரக் கப்பலை வாங்கிய ரொபின்சன், பழைய தண்டையலையே தன்னுடையதான பின்னரும் நியமித்தார்.

தம்பிப்பிள்ளைத் தண்டையலும் இதற்குச் சம்மதித்தார்.

—தனது சுதந்திரத்தில் 'கைவைக்காத' அளவுக்கு நிர்வாகம் நடாத்தக் கூடிய ஒருவருக்குக் கீழ் தம்பிப்பிள்ளைத் தண்டையல் பணியாற்றுவதற்கு எப்பொழுதுமே தயாராக இருந்தார்!



அமெரிக்கருக்குக் கீழ் பணியாற்றுவது அவருக்கு அவ்வளவு கஷ்டமாகத் தோன்றவில்லை!

நாகப்பச் செட்டியாரிடம் பணியாற்றிய திறமை மிக்கவர் தம்பிப்பிள்ளையார்!

வல்வெட்டித்துறையிலிருந்து கொழும்புத் துறைமுகத்துக்குக் கப்பல் சென்றது! தம்பிப்பிள்ளைத் தண்டையல் கப்பலை ஓட்ட, ரொபின்சன் அந்த அழகை ரசித்துக்கொண்டிருந்தார்.

அன்னபூரணிப் பாய்மரக் கப்பல் அமெரிக்கா செல்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தொடங்கினார், ரொபின்சன்!

கொழும்பில் 'அன்னபூரணி' புதுமெருகு பெற்றுக் கொண்டிருந்தாள்!

வாக்கர்ஸ் கம்பனியினரே அவளுக்குப் புதிய தோற்றத்தை அளித்துக் கொண்டிருந்தார்கள்!

அமெரிக்காவுக்குப் போகிறாளல்லவா,

சாதாரண விஷயமா?

எத்தனை ஆயிரம் மைல்கள்! ஆழ்கடலில் எத்தனை பயங்கரங்கள்!

இரட்டை பாய்மரக் கப்பலாக இருந்த அன்னபூரணி அம்மாளுக்கு 'என்ஜின்' பொருத்தப்பட்டது!

காற்றிலே அசைந்து, அசைந்து செல்வதற்குப் 'பாய்கள்' தான் அன்னபூரணிக்கு இயக்கமாக இருந்போதிலும், அந்நியப் பிரதேசத்தில் சமாளித்து, அதனை வெற்றி கொள்ள அந்த 'என்ஜின்கள்' தான் உதவும் என்பதை, 'அன்னபூரணியின்' 'தண்டையல்' தம்பிப்பிள்ளை, ரொபின்சனுக்கு யோசனை சொன்னார்.

அவசர அவசரமாக ரொபின்சன் அமெரிக்காவுக்குப் போகவேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டது!

ரொபின்சன் திடீரென்று அமெரிக்காவுக்குப் புறப்பட்டதற்கு பிரமாதமான காரணம் ஒன்றுமில்லை!

தன் இதயராணி புளொறினை நினைத்துவிட்டார்!

செல்வத்தில் புரளும் அவருக்கு அமெரிக்காவுக்குப் போய் வருவது கஷ்டமான காரியமா?

பறந்து போய்விட்டார்!

'அன்னபூரணி'யின் அழகில் மயங்கி, அதன் அரவணைப்பிலே ஆழ்ந்து போயிருந்த ரொபின்சனுக்கு, தன் காதல் ராணியின் அணைப்பும் அவசியம் தேவைப்பட்டது!

அவ்வளவுதான்!

அமெரிக்காவில் தன் அன்புக்குரியவளின் இதமான அணைப்பில் தன்னை ஒரேயடியாக ரொபின்சன் மறந்து போய்விடவில்லை!

இலங்கைக்குச் சில நாட்களிலேயே திரும்பிவிட்டார்!



ஓர் இடத்தில் அந்த மனிதர் நின்று விட்டார்!

அந்தக் கப்பலின் அழகை அணுவணுவாக ரசித்தார்!

அவள்தான் 'அன்னபூரணி'!

'அன்னபூரணி' என்று சுருக்கி விட்டேன்; 'அன்னபூரணி அம்மாள்' என்றே பெயரிட்டிருந்தார்கள்!

அன்னபூரணியைத் தனதாக்க வேண்டுமென்ற ஆசை அவருக்கு வந்து விட்டது!

—நினைத்ததை முடிப்பவர் அவர்!

எப்படியாவது அக்கப்பலை வாங்கி விடுவதெனத் தீர்மானித்து விட்டார். அத்தோடு இன்னொரு முடிவையும் அவர் எடுத்துக் கொண்டு விட்டார்!

'அக்கப்பலை அமெரிக்காவுக்குக் கொண்டு செல்ல வேண்டும்!'

அந்தக் கப்பலின் தண்டையல் கே. தம்பிப்பிள்ளையை ரொபின்சன் சந்தித்துப் பேசினார்.

தம்பிப்பிள்ளைத் தண்டையல் மிகக் கண்டிப்பான பேர் வழி!

எவருக்கும் மசிந்து கொடுத்து விடமாட்டார்!

தனக்குச் சரியெனப்பட்டதைச் செய்வார்

ரொபின்சனும் அமெரிக்கச் செல்வச் சீமான்களில் ஒருவராக மட்டுமல்லாது, கடலோடும் கலையில் முடிசூடா மன்னனாகவும் திகழ்ந்தவர்!

பசுபிக் சமுத்திரத்தில் மணல்திட்டு ஒன்றைக் கண்டு பிடித்து, அங்கு தன் காலடியைப் பதித்து, அமெரிக்க அரசின் பல்லாயிரக்கணக்கான ரூபாய்களை அதற்காகப் பரிசாகப் பெற்றவர்!

—கொடுக்கிற தெய்வம் கூரையைப் பிய்த்துக் கொண்டு கொடுக்கும் என்பார்கள்!

ரொபின்சனின் கடலோடும் ஆற்றலில் மயங்கி அவர் காலடியில் விழுந்த புளொறின் என்ற சீமாட்டிமூலமும் அவருக்கு மேலும் செல்வம் குவிந்தது.

'அன்னபூரணி அம்மாளை' வாங்கித் தரும்படி விடாப் பிடியாகத் நின்றார் ரொபின்சன்!

தம்பிப்பிள்ளைத் தண்டையல் கைகளை விரித்து விட்டார்!

வல்வெட்டித்துறையில் கட்டப்பட்ட கப்பல் தான் 'அன்னபூரணி'

கப்பல் கட்டும் தொழிலில் அகில உலகமே வியக்கக் கூடிய முறையில், மிகமிக நுண்ணிய வேலைகளைச் செய்வதில் அப்போது வல்வெட்டித்துறையில் உள்ளவர்கள் வல்லுநர்களாக விளங்கினார்கள்!

—இதனை வெளிநாட்டவர்களே ஒப்புக் கொண்டிருக்கிறார்கள்!

அகில உலகிலுமே பிரான்ஸுக்கு அடுத்த படியாக கப்பல் கட்டும் தொழிலை வியக்கும் வண்ணம் செய்பவர்கள் வல்வெட்டித்துறைக் கலைஞர்கள்தான் என்பதை ரொபின்சன், அன்னபூரணிமூலம் முற்றும் முழுதாகத் தெரிந்து கொண்டார்!

'அன்னபூரணி' மீது ஏற்பட்ட காதலை இது மேலும் வளர்த்து ரொபின்சனைப் பைத்தியமாக்கிவிட்டது!

வல்வெட்டித்துறை சுந்தர மேஸ்திரியாரின் திறமைக்குச் சான்று கூறிக்கொண்டிருந்தது 'அன்னபூரணி'!



பசுபிக் சமுத்திரத்தின் தெற்கே—

பனி உறையும் பிரதேசப் பகுதியில், திமிங்கிலத்தைப் பிடித்து, அதன் மூலம் பெரிய வியாபாரம் ஒன்றினை நடாத்த வேண்டு மென்ற ஆசையொன்றும் நீண்டகாலமாக ரொபின்சனின் நெஞ்சை வாட்டிக் கொண்டிருந்தது!

கடல்படு திரவியங்களில் முன்னணி வகிப்பது திமிங்கிலம்!

அந்தக் கனவுக்கு 'அன்னபூரணி' ஈடுகொடுப்பாள் என்ற அசையாத நம்பிக்கை ரொபின்சனுக்கு ஏற்பட்டு விட்டது!

வல்வெட்டித்துறையில் அப்போது, கப்பல் சம்பந்தமான விஷயங்களில் முக்கிய போர்வழியாகத் திகழ்ந்தவர் கதிரவேலுப்பிள்ளை என்பவர்!

பெரிய கப்பலை வாங்குவதற்கோ விற்பதற்கோ விரும்புபவர்கள் கதிரவேலுப்பிள்ளையை அணுகியே தீர வேண்டும்!

—அந்த அளவுக்கு ஒரு பெரிய 'புள்ளி'!

அமெரிக்கச் செல்வச்சீமான் ரொபின்சனுக்கும் 'அன்னபூரணியை' வாங்குவதற்கு ஒரேஒரு வழிதான் இருந்தது!

கதிரவேலுப்பிள்ளையை ரொபின்சன் சந்தித்தார்!

அன்னபூரணியை எப்படியாவது வாங்கித்தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்!

தேவகோட்டையிலுள்ள நாகப்பச் செட்டியாருக்குச் சொந்தமான அந்தக்கப்பல் பற்றிப் பேசுவதற்கு அங்கேயே செல்ல வேண்டுமென்று கூறினார் கதிரவேலுப்பிள்ளை,

ரொபின்சன் ஒப்புக்கொண்டார்!

கதிரவேலுப்பிள்ளை ரொபின்சனை அழைத்துக்கொண்டு தேவ கோட்டைக்குச் சென்றார்!

கப்பல் ஒன்றைப் பேரம்பேசி வாங்கிக் கொடுப்பதும் விற்றுக் கொடுப்பதும் ஒரு 'கலை' என்றே சொல்லலாம்!

அந்தக் 'கலை' கதிரவேலுப்பிள்ளைக்குக் கை வந்த கலை!

நாகப்பச் செட்டியாருக்கு கதிரவேலுப்பிள்ளையை நன்கு தெரியும்.

கப்பல் முதலாளிகள் எல்லாருமே கதிரவேலுப்பிள்ளையை மிக நன்கு அறிந்து வைத்திருந்தார்கள்!

'அன்னபூரணி'யை நல்லவிலைக்குக் கொடுக்கக் கூடிய சந்தர்ப்பம் வந்துள்ளதை நாகப்பச்செட்டியாருக்கு 'காதோடுகாதாக' விளக்கினார் கதிரவேலுப்பிள்ளை.

கதிரவேலுப்பிள்ளையின் கண்ணும் பேசும், கையும் பேசும்! என்பார்கள்.

அறுபதினாயிரம் ரூபாய்க்குக் கப்பலை விற்பதற்குச் சம்மதித்தார் நாகப்பச்செட்டியார்!

கதிரவேலுப்பிள்ளை ரொபின்சனுக்கு இலகுவாகக் காரியத்தை முடித்துக் கொடுத்து விட்டார்!

அன்னபூரணி அம்மாள் ரொபின்சனுக்குச் சொந்தமாகி விட்டடாள்!





சுந்தர மேஸ்திரியாரினால் கட்டப்பட்ட வல்வெட்டித்துறை 'அன்னபூரணி' அமெரிக்கா போகப் போகிறாள் என்ற சங்கதி பரவலாக எங்கும் அடிபடத் தொடங்கியது!

இந்தச் செய்தி—

கடலில் உலகம் சுற்றத் துடித்துக் கொண்டிருந்த இளைஞன் இரத்தினசாமிக்குத் தேனாக இனித்தது!

அந்தக் கப்பலில் தானும் ஓர் ஊழியனாகச் சேர்ந்து கொள்வதென்று தீர்மானித்து விட்டார்!

கப்பலை வாங்கிய ரொபின்சனுக்கு, அவரது கொழும்பு முகவரிக்குத் தன்னைப்பற்றியும், தன் அனுபவத்தைப் பற்றியும் குறிப்பிட்டுக் கடிதம் எழுதினார்.

—தன்னைக் கடலோடியாகச் சேர்த்துக் கொள்ளும்படி விண்ணப்பித்தார்.

பதில் இல்லை.

சளைக்காத இரத்தினசாமி மீண்டும் கடிதம் எழுதினார்.

பதில் இல்லை.

லேசாக விட்டுவிடுபவரா இரத்தினசாமி?

கொழும்புக்குப் போனார்; றொபின்சனைச் சந்தித்தார்!

முன்னர் விண்ணப்பித்த விபரங்களையும், தனது விருப்பத்தையும் தெரிவித்தார்.

நிறைந்தளவு வேலைக்குள் பதில் எழுதுவது முடிந்த காரியமா என்று கேட்டார் றொபின்சன்.

சில நிமிட நேரங்கள் இரத்தினசாமியுடன் பேசினார்.

இரத்தினசாமியைப் பிடித்து விட்டது!

'அன்னபூரணி'யில் அவரும் அமெரிக்காவுக்குச் செல்வது உறுதியாகிவிட்டது!

வல்வெட்டித்துறையில் அன்னபூரணிப் பாய்மரக் கப்பலை வாங்கிய றொபின்சன், பழைய தண்டையலையே தன்னுடையதான பின்னரும் நியமித்தார்.

தம்பிப்பிள்ளைத் தண்டையலும் இதற்குச் சம்மதித்தார்.

—தனது சுதந்திரத்தில் 'கைவைக்காத' அளவுக்கு நிர்வாகம் நடாத்தக் கூடிய ஒருவருக்குக் கீழ் தம்பிப்பிள்ளைத் தண்டையல் பணியாற்றுவதற்கு எப்பொழுதுமே தயாராக இருந்தார்!



அமெரிக்கருக்குக் கீழ் பணியாற்றுவது அவருக்கு அவ்வளவு கஷ்டமாகத் தோன்றவில்லை!

நாகப்பச் செட்டியாரிடம் பணியாற்றிய திறமை மிக்கவர் தம்பிப்பிள்ளையார்!

வல்வெட்டித்துறையிலிருந்து கொழும்புத் துறைமுகத்துக்குக் கப்பல் சென்றது! தம்பிப்பிள்ளைத் தண்டையல் கப்பலை ஓட்ட, றொபின்சன் அந்த அழகை ரசித்துக்கொண்டிருந்தார்.

அன்னபூரணிப் பாய்மரக் கப்பல் அமெரிக்கா செல்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தொடங்கினார், றொபின்சன்!

கொழும்பில் 'அன்னபூரணி' புதுமெருகு பெற்றுக் கொண்டிருந்தாள்!

வாக்கர்ஸ் கம்பனியினரே அவளுக்குப் புதிய தோற்றத்தை அளித்துக் கொண்டிருந்தார்கள்!

அமெரிக்காவுக்குப் போகிறாளல்லவா,

சாதாரண விஷயமா?

எத்தனை ஆயிரம் மைல்கள்! ஆழ்கடலில் எத்தனை பயங்கரங்கள்!

இரட்டை பாய்மரக் கப்பலாக இருந்த அன்னபூரணி அம்மாளுக்கு 'என்ஜின்' பொருத்தப்பட்டது!

காற்றிலே அசைந்து, அசைந்து செல்வதற்குப் 'பாய்கள்' தான் அன்னபூரணிக்கு இயக்கமாக இருந்போதிலும், சூனியப் பிரதேசத்தில் சமாளித்து, அதனை வெற்றி கொள்ள அந்த 'என்ஜின்கள்' தான் உதவும் என்பதை, 'அன்னபூரணியின்' 'தண்டையல்' தம்பிப்பிள்ளை, றொபின்சனுக்கு யோசனை சொன்னார்.

அவசர அவசரமாக ரொபின்சன் அமெரிக்காவுக்குப் போகவேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டது!

ரொபின்சன் திடீரென்று அமெரிக்காவுக்குப் புறப்பட்டதற்கு பிரமாதமான காரணம் ஒன்றுமில்லை!

தன் இதயராணி புளோறினை நினைத்துவிட்டார்!

செல்வத்தில் புரளும் அவருக்கு அமெரிக்காவுக்குப் போய் வருவது கஷ்டமான காரியமா?

பறந்து போய்விட்டார்!

'அன்னபூரணி'யின் அழகில் மயங்கி, அதன் அரவணைப்பிலே ஆழ்ந்து போயிருந்த ரொபின்சனுக்கு, தன் காதல் ராணியின் அணைப்பும் அவசியம் தேவைப்பட்டது!

அவ்வளவுதான்!

அமெரிக்காவில் தன் அன்புக்குரியவளின் இதமான அணைப்பில் தன்னை ஒரேயடியாக ரொபின்சன் மறந்து போய்விடவில்லை!

இலங்கைக்குச் சில நாட்களிலேயே திரும்பிவிட்டார்!





அமெரிக்காவுக்குப் புறப்படுவதற்கான ஏற்பாடுகளைத் தம்பிப்பிள்ளை தண்டையலின் யோசனைப்படி ரொபின்சன் செய்து முடித்தார்!

1937 ஜனவரி 27—

நினைத்துக் கூடப்பார்க்க முடியாத, நெஞ்சத்தை அஞ்சவைக்கும் அந்தப் பயணம் ஆரம்பமானது!

கொழும்புத் துறைமுகத்திலிருந்து வல்வெட்டித்துறையில் பிறந்து, தவழ்ந்து, வாழ்ந்து கடலோடுவதில் தனிக்காட்டு ராஜாவாகத்திகழ்ந்த தம்பிப்பிள்ளைத் தண்டையல் தலைமையில்—

வல்வெட்டித்துறைக் கடலோடிகளான தா. சபாரத்தினம், ஐ. இரத்தினசாமி, க. நடராசா, சேது நவரத்தினராசா, சி. சிதம்பரப்பிள்ளை, சுப்பிரமணியம், தில்லையம்பலம்

ஆகியோர்களுடன் 'சாண்டோ'வாகத்திகழ்ந்துவந்த சங் கரதாஸ் ஆகியோருடன் இரட்டைப் பாய்மரக் கப்பலான 'அன்னபூரணி' அம்மாள்,

அசைந்து, அசைந்து செல்லத் தொடங்கியது!

கப்பல் உரிமையாளர் றொபின்சன் ஆனந்தத்தால் தம்பிப்பிள்ளைத் தண்டையலின் முதுகில் தட்டிக் கொடுத் தார்!

எல்லாருமே வெகு உற்சாகமாக, பெரும் பயங்கரம் நிறைந்த பயணத்துக்குத் தம்மைத் தயாராக்கிக் கொண் டார்கள்!

இந்தக் கப்பலில் இன்னொருவரும் கூடச் சென்ருர்.

கடலோடுவதில் 'சுழிய'ரான இங்கிலாந்தைச் சேர்ந்த குக் என்பவர்தான் அவர்!

காற்றின் வேகத்துக்குத் தக்கபடி, 'அன்னபூரணி' அமைதியாகத் தன் பயணத்தை ஆரம்பித்தாள்!

'அன்னபூரணி'க் கப்பலில் சென்றவர்களில் மிக வயதில் குறைந்த கடலோடி சேது நவரத்தினராசா.

அவருக்கு அப்போது வயது 21.

நவரத்தினராசாவின் தந்தையார் சேது நாராயண பிள்ளை பெரிய கடலோடியாகத் திகழ்ந்தவர்.

புலிக்குப் பிறந்தது பூனையாகுமா?

தந்தையுடன் சேர்ந்து கொண்டு கடலோடியாக வாழ்வை ஆரம்பித்தார் இவர்!

—இவரது தந்தையின் தலைமையில் சென்ற கப்பலில் ரங்கூன், பர்மா, பினங் ஆகிய இடங்களுக்குச் சென்று வந்தார்!



'பர்மா—2' என்ற சரக்குகள் ஏற்றி இறக்கும் கப்பலில் பணியாற்றிய அனுபவமும் இந்த சேது நவரத் தினராசாவுக்கு உண்டு!

கொழும்புத் துறைமுகத்திலிருந்து புறப்பட்ட 'அன்னபூரணி'யின் கதையை சற்றுநேரம் சேது நவரத்தின ராசாவிடம் கேட்டுப் பார்ப்போமா!

அவரே சொல்கிருர்:

''திரும்பிப் பார்க்கிறேன் .....

''கொழும்புத் துறைமுகத்தை என்ன, இலங்கை மாதாவைத்தானும் பார்க்க முடியவில்லை!

''காற்றின் உதவி கொண்டு கலம் சென்று கொண்டிருந்தது.

'' அப்போது—

''வட கிழக்குப் பருவக் காற்று வீசும் காலம்.

''எங்கள் திசை மாறவேண்டி இருந்தது.

''மாலைதீவுக் கலங்கரை விளக்கத்தை சென்றடை வதற்குச் சுலபமாக இத்திசை அமைந்தது!

''மாலைதீவைத் தாண்டிவிட்டோம்!

''அடுத்து—

''கப்பல் தொழிலின் இரகசியங்கள் சிலவற்றை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்ல வேண்டும்.

''சீறிச் சினந்து எதிர்கொள்ளும் புயல் காற்றினுலும், சூருவளியினுலும் தாக்குப் பிடிக்க முடியாது.

"நடுக்கடலில் இருக்கும் பெரும் பாறைகளில் பேரலைகள் முட்டி, மோதி எழுப்பும் பயங்கரத்தைப் பார்க்கவும் கேட்கவும் சக்தியற்றவர்கள்,

"கப்பலை ஆடாத ஆட்டம் ஆட்டி, கொந்தளித்து ஆர்ப்பரிக்கும் கருங்கடல் அலைகளுக்கு ஈடுகொடுக்க முடியாதவர்கள்.

"கடலோடிகளாக இருக்கத்தகுதியற்றவர்கள்!

"அஞ்சி, அஞ்சிச் சாகும் கோழை நெஞ்சம் படைத்தவர்களால், கப்பல் ஓட்டியாக இருக்கவே முடியாது!

"வாழ்வு, அல்லது சாவு!

"சுறுசுறுப்பும் இந்தத் தொழிலுக்கு அவசியமானது..

மீண்டும் பயணக்கதைக்கு வருகிறார்:

"மாலைதீவு தாண்டிவிட்டோமல்லவா!

"பகல் பொழுது முழுவதும் கப்பல் காற்றின் வேகத்துடன் சேர்ந்து சென்றதால், விரைவாகவே மாலை தீவுத் துறைமுகத்தைத் தாண்டினோம்.

"இனி மிகஎச்சரிக்கையாக இருக்கவேண்டும்.

"எதற்குமே தயாராக இருக்க வேண்டும்!

"எந்தப் பயங்கரமும் எம்மை, எந்நேரத்திலும் எதிர் நோக்கலாம்

"றொபின்சன் எங்களுக்கு உற்சாகம் ஊட்டிக் கெண்டிருந்தார்.

"எங்களுடன் சேர்ந்து, எங்கள் சாப்பாட்டைச் சில சயம் சாப்பிடுவார்!

"ஆறுமாதத்துக்குத் தேவையான அரிசி மற்றும் சில சாமான்களும் இருந்தன.

"எங்களுக்குச் சாப்பாட்டைப்பற்றிய [பிரச்சனையே இருக்கவில்லை!



"சில சமயங்களில் ஏற்படும் ஒரு முக்கிய பிரச்சனையைச் சமாளிக்கத்தான் எமது பாய்மரக்கப்பலில் 'எஞ்ஜினைப்' பூட்டியிருந்தோம்.

"கருங்கல் பிரதேசத்தில், 'சூனியப் பிரதேசம்' என்ற ஒரு இடம் கடலில் சில சமயம் ஏற்படுகிறது.

"சூரிய ஒளிக்கதிர்கள் நேரடியாகக் கடலைத் தாக்கும் போது காற்று இல்லாமல் போய்விடுகிறது!

"எஞ்ஜின் இயக்கத்தில்தான் செல்ல வேண்டியிருக்கும்.

"அப்படியான சந்தர்ப்பங்களில் பாவிப்பதற்குத்தான் எஞ்ஜினை முன்னெச்சரிக்கையாக தம்பிப்பிள்ளைத்தண்டையல் ஆலோசனையை றொபின்சன் ஏற்று முன்னெச்சரிக்கையாகப் பொருத்தியிருந்தார்!

"சூறாவளியும் இப்படியான சூனியப் பிரதேசத்தில் தான் நிகழ்கிறது.

"சமுதாயத்தில் தன்னந்தனியாகவே நிற்பதுபோல இருக்கும் கப்பலுக்கு வழிகாட்டி யார்?

"சில உபகரணங்கள்தான்!

"கப்பல் நகர ஆரம்பித்தவுடன் எங்கிருந்து எங்கு போக வேண்டுமென்பதைத் தெரிந்து கொள்வதற்கு உலக வரைபடம் ஒன்று கப்பலுக்குள் மேசை ஒன்றின் மீது விரிக்கப்பட்டிருக்கும். கடல்மார்க்கமாகச் செல்லும் கப்பல்களுக்கென்றே அந்த வரைபடம் தயாரிக்கப்பட்டிருக்கும்.

"அது எந்த நேரமும் அந்த மேசையிலேயே இருக்கும்.

"நகரங்களைப் பற்றிய விபரங்கள் அந்த 'சாட்'டில் இருக்காது!

"உலகத் துறைமுகங்களைக் கொண்டதாக அந்த வரை படம் இருக்கும்.

''கொம்பாஸ்' என்ற திசையறி கருவி கப்பலுக்கு வழி காட்டும்!

''நமது கப்பல் நகர ஆரம்பித்தவுடனேயே நாம் கடந்து செல்லும் தூரத்தை அறியக் கூடியதாக ஒரு கருவி சமூத்திரத்திலும், கப்பலிலுமாகப் பொருத்தி விடப்பட்டிருக்கும்.

''இக்கருவி— கப்பலோடும் போது சுழன்று சுழன்று, சென்ற தூரத்தைக் காட்டிக் கொண்டிருக்கும்.

''அடுத்த கருவி—

''சூரியனை அளந்து, சில கணக்கு முறைகளைக்கொண்டு சமுத்திரத்தில் நாம் எங்கு இருக்கிறோம் என்பதையறிந்து சொல்வதற்கான 'கமான்' என்ற கருவி.

''நாம் அந்தக் கருவி மூலம் எங்கு நிற்கிறோம் என்பதை உறுதி செய்து கொண்டு, மேசையிலுள்ள உலக வரைப்பட 'சாட்'டில் நிற்கும் இடத்தைப் புள்ளி இட்டுக் கொள்வோம்!

'' சிலசமயம்,

''நாம் செல்ல வேண்டிய இடத்தில் ஏதாவது மாற்றம் செய்யவேண்டி இருந்தால், திசையை மாற்றிப் பயணத்தைத் தொடருவோம்....''






தம்பிப்பிள்ளைத் தண்டையல் தலைமையில் 'அன்னபூரணிஅம்மாள்' தனது பயணத்தைத் தொடர்ந்து கொண்டிருந்தாள்.

தண்டையலுக்கு உதவியாக, மற்றைய கடலோடிகள் ஒவ்வொரு வேலையையும் செய்வார்கள்!

சங்கரதாஸ் அடிக்கடி தனது 'சாண்டோ' விளையாட்டுகளைச் செய்து காட்டுவார்!

எவ்வளவு கடினமான பயணமென்றாலும், பொழுது போவது தெரியாமல், கப்பல் நகர்ந்து கொண்டிருந்தது!

றொபின்சன் இருக்கிறாரே—

அவர் கடலோடுவதில் ஒரு வீரர்! சாதனைக்காரர்! துணிச்சல் நிறைந்தவர்!

'அன்னபூரணி'க்கு முன்னரே, பத்துத்தொன் படகில் உலகத்தை வலம் வந்து சாதனை நிகழ்த்தியவர்!

பத்துத்தொன் படகில், உலகத்தைத் தன்னந்தனிய ஞக வலம் வந்த ருெபின்சனுக்கு ஒன்பது பேருடன் பயணம் செய்வது பெரிய விஷயமாக இருந்திருக்க மாட்டாதல்லவா!

கருங்கடலில் ஏழு, எட்டு மைல் வேகத்தில் கப்பல் சென்றுகொண்டிருந்தது—

கப்பலின் முன் அணியத்தில் நின்று கொண்டு ருெபின்சன் கடலுக்குள் குதிப்பார்!

—நீச்சலடித்து விளையாடுவார்! பின்னர் கப்பலை வந்து பிடித்து, ஏறுவார்!

மீண்டும் கடலுக்குள் குதிப்பார்!

அவருக்கு இது ஒரு விளையாட்டு! அவருடைய இந்த 'விளையாட்டை' தண்டையலும் கடலோடிகளும் ரசிப்பார்கள். ருெபின்சனுக்கு ஓரளவு தமிழ்பேசத் தெரியும்.

குழந்தைகள் பேசும் மழலைத் தமிழாக அது இருக்கும்!

கடலோடிகள் பேசும் தமிழ் அவருக்குப் புரியும். அவர்கள் தமிழில் பேசினுல், புரிந்து கொண்டு பதில் சொல்லுவார்!

ஏடன் துறைமுகத்தை 'அன்னபூரணி' வந்து சேர்ந்து விட்டாள்!

மழையே கண்டிராத பூமி! ஒரே வறட்சி!

இதுவரை இரண்டாயிரம் மைல் தூரத்தைக் கப்பல் கடந்து விட்டது!

பயணம் வெற்றி பெற்றே தீரும் என்ற நம்பிக்கை தண்டையலுக்கும், கடலோடிகளுக்கும் ஏற்பட்டுவிட்டது

ஏடனை அடைந்த அன்றைய தினம் அலுப்புத்தீர உறங்கினுர்கள்.



குகையும், மலையுமாக வரண்டு போய்க்கிடந்த ஏடன் துறைமுகப்பகுதியில், வல்வெட்டித்துறை 'அன்னபூரணி' நங்கூரமிட்டு நிமிர்ந்து நின்ருள்!

பகல் பொழுதை அந்தப் பகுதியைச் சுற்றிப் பார்ப்பதிலும், சாப்பாட்டுக்கும், தூக்கத்துக்கும் கப்பலுக்கு வருவதுமாக தம்பிப்பிள்ளை கோஷ்டியின் நேரம் போய்க் கொண்டிருந்தது!

மீண்டும் ருெபின்சனுக்கு ஒரு தவிப்பு!

—தன் அன்புக்குரிய இனியாளைக் காணவேண்டுமென்ற துடிப்பு ருெபின்சனுக்கு ஏற்பட்டுவிட்டது!

ஏடன்வரை தன் இதயம் கவர்ந்தவள் இல்லாது தனித்தே பயணம் செய்தது இப்போது அவருக்கு ஒருவித 'சலிப்பை'த் தந்தது!

ஏடனிலிருந்து 'அன்னபூரணி' பயணத்தைத்தொடர அவருடைய அன்புக்குரிய 'புளொறின்' தேவைப்பட்டாள்!

ருெபின்சன் ஏடனிலிருந்து அமெரிக்காவுக்குப் பறந்து சென்று புளொறினை அழைத்து வர முடிவு செய்தார்.

அமெரிக்கா போய் திரும்பிவரும்வரை கப்பலைப் பார்த்துக் கொள்ளும்படி தம்பிப்பிள்ளை தண்டையலிடம் ஒப்படைத்து விட்டுப் புறப்பட்டார்!

தன்னை நம்பிப் புறப்பட்டவர்களுக்குத் தேவையான வசதிகளையெல்லாம் செய்து கொடுத்து விட்டே அவர் அமெரிக்காவுக்குப் பறந்தார்!

உணவு, உடை, சம்பளம் என்பனவற்றை கை நிறையக் கொடுத்ததினுல், தண்டையல் கோஷ்டி கடைசி வரை ருெபின்சனுக்கு நேர்மையாக உழைத்தார்கள்!

ரொபின்சன் திறமைக்குத் தான் முதலிடம் அளித்தார்!

மற்றவர்களின் சொந்த விஷயங்களில் தலையிடவே மாட்டார்!

மேலை நாட்டவர்களிடமிருந்து நாம் படிக்க வேண்டிய பல பாடங்களில் இது ஓர் உயரிய பண்பாகும்!

குறிப்பாக, நாம் இந்த விஷயத்தை நன்கு கற்றுக் கொள்ள வேண்டும்!

ஒருவன் கொஞ்சம் நல்லாயிருக்கிறனென்றால்,

பொறுக்கமாட்டான்!

காட்டிக் கொடுப்பதே முதல் கைங்கரியமாக இருக்கும்!

'தனக்கு மூக்குப் போனாலும் பரவாயில்லை; எதிரிக்குச் சகுனப்பிழையாக இருக்க வேண்டும்'

இப்படியான 'கழுத்தறுப்பு' நீங்கும் போதுதான் நாம் உயர்வோம்!

ஏதோ ஒரு தொழிலைச்செய்து கஷ்டப்பட்டுச் சம்பாதிக்கிறன் என்றால்—

அதைப் பொறுத்துக் கொள்ள முடியாமல், காட்டிக் கொடுத்து 'ஆத்மதிருப்தி' அடைவது, நம் மத்தியிலிருந்து அகலும்போதுதான் எமக்கு விடிவுகாலம் பிறக்கும்!

மேலை நாட்டவர்களின் வேகமான முன்னேற்றத்துக்கு, அவர்களிடமுள்ள பரந்த நோக்கமே காரணம்!

ரொபின்சனிடமுள்ள பண்புகளைப்பற்றி இரத்தினசாமியும், சேது நவரத்தினராசாவும் என்னிடம் சொல்லிக் கொண்டிருந்தபோது,



என் உள்ளத்தில் மேற் சொன்ன சில எண்ணங்கள் அலைமோதின.

—தம்பிப்பிள்ளைத் தண்டையலும் ஒரு தடவை இலங்கை சென்று வர விரும்பினர்.

இவருடன், சேது நவரத்தினராசா, நடராசா, 'சாண்டோ' சங்கரதாஸ் ஆகியோரும் சேர்ந்து கொண்டார்கள்!

இரத்தினசாமி, சபாரத்தினம், சிதம்பரப்பிள்ளை ஆகியோர்களிடம் தம்பிப்பிள்ளைத் தண்டையல் கப்பலை ஒப்படைத்தார்!

இலங்கை போகும் தண்டையலுக்கும், மற்ற மூவருக்கும் பரிசுப் பொருட்களும், சன்மானமும் வழங்கி,

பிரான்ஸ் நாட்டு உல்லாசப் பிரயாணிகள் கப்பலான 'அலெக்ஸ் சாந்திரியா'வில், இரண்டாம் வகுப்பில் அவர்களை இலங்கைக்கு ரொபின்சன் வழி அனுப்பிவைத்தார்.

இதேசமயம்—

ரொபின்சன் அமெரிக்காவுக்குப் பறந்தார்!




‘அன்னபூரணி’ ஏடனிலிருந்து புறப்படுவதற்குச் சில காலம் பொறுத்துத்தான் ஆகவேண்டும்.

அமெரிக்காவிலிருந்து ரொபின்சன் தம்பதியர் வந்து சேரவேண்டும்.

தம்பிப்பிள்ளை தண்டயல் கோஷ்டி வந்து சேர வேண்டும்.

அதுவரை—

வல்வெட்டித்துறைப் பக்கம் ஒருமுறை சென்று திரும்புவோமா?

1918ம் ஆண்டுக்குப் பின், வல்வெட்டித்துறை துறை முகத்தில்,

சித்திரை, வைகாசி மாதத்தில், 60 கப்பல் வரை காணக்கூடியதாக இருக்கும்.

வல்வெட்டித்துறை மக்களின் வாழ்வே இந்தக்கப்பல் தொழிலில் தான் தங்கியிருந்தது.

யாழ்ப்பாணத்துப் புகையிலைக்குத் திருவனந்தபுரத்திலும், கொல்லத்திலும், ஆலைப்பள்ளியிலும் நல்ல கிராக்கி!



கப்பல்கள் இவற்றைப் பெருவாரியாகக் கொண்டு சென்றன.

வேப்பூர், மங்களபுரம், போன்ற பல்வேறு இடங்களிலிருந்து ஓடுகள் ஏற்றிக்கொண்டு, கொழும்பு, காலி யாழ்ப்பாணம், வல்வெட்டித்துறை ஆகிய துறை முகங்களில் இறக்கினார்கள்.

—இப்படியான பல சுவையான அந்தக் காலப் பெருமைகளை என்னிடம் கூறியவர், ‘வ. இ’ என்று வல்வெட்டித்துறை மக்களால் அன்பாக அழைக்கப்படும் இராமசாமிப் பிள்ளை அவர்கள்தான்.

பத்து ஆண்டுகளுக்கு முன்னர் அவரை, அவரது இல்லத்தில் சந்தித்துப் பேசியது இன்னமும் என் நினைவில் இருக்கிறது.

இப்போது வல்வெட்டித்துறை நகரசபைத்தலைவராக இருக்கும் பெரியார் ச. ஞானமூர்த்தி ஐயா அவர்கள் தான், அவரை எனக்கு அறிமுகப்படுத்தி வைத்தார்கள்.

1925-ஆம் ஆண்டு தொடக்கம், 1958-ஆம் ஆண்டு வரை சிறிய கப்பல் முதல் பெரும் பெரும் கப்பல்களுக்கு அதிபதியாக இருந்தவர் ‘வ. இ.’ சிலோன் மாஸ்டர் சேர்டிபிக்கேற், மெற்றியாஸ் இரண்டாவது காப்டன் சேர்டிபிக்கேற் பெற்றுக்கப்பலோட்டியாகவும் இருந்தார்!

திடகாத்திரமான உடலும், சுறுசுறுப்பும், உறுதியான பேச்சும், நிமிர்ந்த பார்வையும்—

‘வ. இ.’ அவர்களைப்பற்றி நினைக்கும்போது, இப்படித்தான் அவர் என் கண்களுக்குள் வருகிறார்!

பாம்பன்,
தேவிபட்டினம்,
தொண்டி,

முத்துப்பேட்டை,
அதிராம் பட்டினம்,
கோடியாக்கரை ஊடாக
நாகபட்டினம்,
காரைக்கால்,
பறங்கிப்பேட்டை,
கடலூர்,
பாண்டிச்சேரி,
தமிழ்நாடு,
ஆகியபட்டினங்களுக்கும்,
தெலுங்குநாடு,
கொத்தபட்டணம்,
காக்கிநாடு,
விசாகபட்டணம்,
வங்காள விரிகுடாவில் கல்கத்தா,
சிட்டிகாமம்,
அரிக்கன்,

போன்ற பல்வேறு இடங்களுக்கும் திரைக்கடலோடி, திரவியம் தேடி வெற்றிகண்டிருக்கிறது இவரது கப்பல்கள்

—சிவகாமசுந்தரி
—ஆதிலட்சுமி
—சண்முகசுந்தரலட்சுமி
—திருநிலைநாயகி
—ஸ்ரீ மகாலட்சுமி
—நரசிம்மசாமி

இராமசாமிப்பிள்ளை அவர்களுக்குப் பெருமை தேடிக் கொடுத்த கப்பல்கள்தான் இவை.



40 தொன் முதல் 295 தொன் வரையான பெரிய கப்பல்கள் வைத்துப் பெரும் வியாபாரங்களை நடத்தியவர் இவர்!

அவரே உங்களுடன் பேசுகிறார்:

''பெரிய பாய்மரக் கப்பல்கள் புரட்டாதி மாதத்தில் புறப்பட்டு, அரிக்கனிலிருந்து லட்சக்கணக்கான நெல் மூடைகளை ஏற்றிக் கொண்டு வல்வெட்டித்துறை, பருத்தித்துறை, யாழ்ப்பாணம் துறைமுகங்களில் பறிக்கப்பட்டு வந்தன.

''பர்மா, ரங்கூன், மோல்மீன், அந்தமான், நிக்கோபார், யாவா, சுமத்திரா, போர்னியோ, பினுங்கு, சிங்கப்பூர் போன்ற இடங்களிலும் நம்மவர்கள் பலசாமான்களை ஏற்றியும் இறக்கியும் வந்தார்கள்.

''அப்போது பிரதான துறைமுகமாக வல்வெட்டித்துறையும், அடுத்துப் பருத்தித்துறை, காங்கேசன்துறை, ஊர்காவற்றுறை, யாழ்ப்பாணம் ஆகியனவும் திகழ்ந்தன.

''அக்காலத்தில் பாய்க்கப்பல்கள் கட்டுவதில், கைதேர்ந்த கலைஞர்களாகத் திகழ்ந்தவர்கள் பலர். அவர்களில் சிலரைக் குறிப்பிட்டேத்தான் ஆகவேண்டும்—

''வேலுப்பிள்ளை மேஸ்திரியார்,
''வடிவேலு மேஸ்திரியார்,
''சின்னத்தம்பி மேஸ்திரியார்,

''போன்ற சிலரை என்னால் இன்னமும் மறக்க முடியாதிருக்கிறது.

''நவீன முறையில், கப்பல்களை உருவாக்கிய பெருமை இவர்களையே சேரும்.

''150 தொன் தொடக்கம், 200, 250 தொன் வரையான மூன்று பாய்மரக் கப்பல்கள் பிரசித்தி பெற்றவை.

"இந்தக் கப்பல்களில் சேர்டிபிக்கேற் பெற்ற காப்டன், இரண்டாவது காப்டன், கப்பல் செலுத்தும் சுக்கானியர், கிலாசு, சமையல்காரர் போன்றவர்கள் கடமை யாற்றுவார்கள்.

"முழுக்க முழுக்க வல்வெட்டித்துறையைச் சேர்ந்த வர்களே சகல வேலைகளையும், துணிகரமாகவும், நேர்மை யாகவும் செய்து வந்தார்கள்.


ஜப்பான்காரன் குண்டு போட்ட போது, நீர்மூழ்கிக் கப்பலால் பாய்மரக்கப்பலைச் சிதறடித்த போது கடலுக்கு அர்ப்பணித்த வல்வெட்டித்துறை வீரர்கள் பலர்! சிதறடிக் கப்பட்ட கப்பலின் ஒரு துண்டைப் பிடித்துக் கொண்டு தப்பிய வல்வெட்டித்துறைச் சாமிக்கண்டு மேஸ்திரி என்ப வரை நான் சந்தித்துப்பேசிய போது திகில் நிறைந்த பயங் கர அனுபவங்களை எனக்குச் சொன்னார்.

சமையற்காரராகக் கப்பலில் சென்ற ஒருவர் ஒரு காலைப் பயங்கரத்தாக்குதலின் போது இழந்து உயிருடனேயே வல்வெட்டித்துறை திரும்பிய 'கதை' யைக் கேட்டபோது, என் கண்களில் நீர் வழிந்து கொண்டிருப்பதை உணர்ந்தேன்.

மறைந்த தண்டையல்கள் பலரின் வீரசாகசங்களை கேட்டறிந்து வியந்தேன்.

அவர்களில் வாழ்ந்து கொண்டிருக்கும் தண்டையல் கள் சிலரின் அனுபவங்களை கேட்டறிந்தேன்.





அந்தக் கப்பலில் இருபத்திரண்டு பேர் அடங்கிய வர்கள் பணியாற்றிக் கொண்டிருந்தார்கள்.

பொன்னையா கந்தசாமித் தண்டையலும், சிவசுப்பிர மணியம் தண்டையலும் கப்பலின் காப்டன்கள்.

கப்பலைத் திருத்தி அமைப்பதற்காக ஆந்திராவிலுள்ள காக்கி நாடாவுக்கு ஏச். ஏ. காட்டுன் என்ற அக் கப்பல் சென்று கொண்டிருந்தது.

சென்னைக்கு மேல் எண்பத்தைந்து மைல் தூரத்தில்—

ஒரு வெள்ளிக்கிழமை—

பயங்கரச் சூறாவளி!

பாய்கள் சுக்கு நூறாகின.

கப்பல் நொருங்கிச் சின்னாபின்னமாகியது.

கப்பலுக்குள் இருந்த ஒரேயொரு படகில்,

அந்த இருபத்திரண்டு பேரும் உயிரே தஞ்சமெனப் பிடித்துக் கொண்டார்கள்!

சிலரது உடலில் ஆடையே இல்லை!

'ஆண்டவனே அபயம்' என்பதைத் தவிர, அவர்களுக்கு வேறொரு துணையுமில்லை!

மூன்று நாட்கள்.

உடல் தொய்ந்து, அறிவு மயங்குகின்ற நிலை.

வல்வெட்டித்துறை அம்மன் கோவிலடியில் வசித்த அந்த மனிதர் தமக்கு ஏற்பட்ட பயங்கர அனுபவத்தை என்னிடம் சொல்லிக் கொண்டிருந்தார்.

இப்போது எண்பத்தைந்து வயது இருக்கும் அவருக்கு.

திருச்சிற்றம்பலம் சீனிவாசகம் என்ற சீனி அம்மான் 'கதை' சொன்ன விதமே தனிப்பாணி.

நெஞ்சத்தைச் சிலிர்க்க வைத்தது.

பத்து வயதில் அவர் கப்பலில் 'பொடியனாக'ப் போனார். ஐம்பது வயது வரை அவர் கப்பலிலேயே காலத்தைக் கழித்தார்.

நேரு, காந்தி, ராஜாஜி, ஜயப்பிரகாஷ் நாராயண், காமராஜர், அறிஞர் அண்ணாத்துரை போன்ற பெரியார்களை நேரில் சந்தித்தவர் சீனி அம்மான்!

''அந்தக் காலத்தில் பர்மா, பினாங்கு, இந்தியா என்றெல்லாம் பாய்மரக் கப்பலில் பயணம் செய்தவன். கடலுக்குள் வாழ்ந்தவன்'' என்று கம்பீரமாக நெஞ்சை நிமிர்த்திச் சொன்னார்.

தொடர்ந்து தனது பயங்கர அனுபவத்தைச் சொல்கிறார்;



''சாவு எம்மை அண்மிக்கொண்டிருக்கிறதென்பதைத் தவிர வேறு ஒன்றுமே எமக்குத் தெரியாது!

''ஏதாவது ஒரு பெரிய கப்பல் அந்த நேரம் வரமாட்டாதா என்ற கடைசி நேர ஏக்கம்.

''சிறு துரும்பாவது கிடைத்துவிட்டால்...

''ஒருவருக்கு ஒருவர் பேசவே சக்தியில்லை!

''அந்த நேரத்தில்—

''புகைக்கப்பல் ஒன்று!

''தூரத்தே போய்க்கொண்டிருந்தது.

''எம்மைக் கண்ட அவர்கள் எம்மை மீட்பார்கள் என்றொரு நம்பிக்கை.

''ஓ!

''அந்த நம்பிக்கையையும் மூழ்கடிக்கப்பட்டு விட்டது

''கப்பல் எம் பக்கம் வராமலேயே போய்விட்டது!

''இனி—

''சாவுதான்! முடிவு செய்து விட்டோம்!

''அப்போதுதான் —

''அந்த மாலை நேரம்—

''சீனக் கப்பல் ஒன்று எம் அருகே வந்தது.

''கடவுள் கருணை காட்டி விட்டான்!

''கயிறு எறிந்து எங்களை மீட்டார்கள்.

' எங்களுக்கு நிற்கவே சக்தியில்லை.

''கால்கள் தண்ணீரில் ஊறி ஆனைக்கால்கள் போன்று பெருத்து விட்டன.

''பிஸ்கற் தந்தார்கள். பிஸ்கற்றை அரைத்துத் தரும்படி கேட்டோம்.

''தண்ணீரைத் தொண்டைக்குள் ஊற்றி, அரைத்து மாவான பிஸ்கற்றையும் போட்டுக் கொண்டோம்.

''சென்னையில் கொண்டுபோய்ச் சேர்த்தார்கள். மறு பிறவிகளாக அங்கிருந்து ஊர்வந்து சேர்ந்தோம்.

''கணபதிப்பிள்ளைத் தண்டையல்,

''பொன்னுசாமித் தண்டையல்,

''மாணிக்கம் தண்டையல் ஆகியோருக்குக் கீழ் நான் பணியாற்றியுள்ளேன்'' என்று பெருமையாகச் சொன்னார்.

ஒரு பெண் கப்பல் முதலாளி வல்வெட்டித்துறையில் கொடிகட்டிப் பறந்திருக்கிறார்!

பல கப்பல்களுக்குச் சொந்தக்காரராக இருந்தார்.

பெயரளவில் மட்டுமல்ல—

எத்தனையோ கப்பல்களை வைத்து, வியாபாரம் செய்து, அவற்றையெல்லாம் நிர்வகித்த திறமையும், ஆற்றலுமிக்கவராக வாழ்ந்தார்!

அவர்தான்—

சின்னத்தங்கம் முதலாளி!

இவரது தகப்பனார் வைரமுத்து முதலாளி.

பெரும் பெரும் கப்பல்களுக்குச் சொந்தக்காரர்.

சரவணமுத்து என்பவரைத் தனது மகள் சின்னத்தங்கத்துக்குத் திருமணம் செய்து வைத்தபோது,

கப்பல்களைச் சீதனமாகக் கொடுத்தார்!



கணவனும் மனைவியுமாக, கப்பல்களை வைத்து வியாபாரத்தை வெற்றிகரமாக நடாத்தி வந்தனர்!

ஆருயிர் கணவன் இறக்கவே, சின்னத்தங்கம் கப்பல்களையும், வியாபாரத்தையும் தனித்துப் பொறுப்பேற்று நடாத்தவேண்டிய நிலைக்குள்ளானார்!

மதுரை மீனாட்சி,

சுபத்திரையம்மா,

விநாயக பாக்கியலட்சுமி ஸ்கூனர்,

கருங்கடல் வெற்றிவேலாயுதம்.

சோமசுந்தரம்,

நாகரிகத்துல்லா,

மதுரைச் சொக்கலிங்கம்,

இவ்வளவு கப்பல்களையும் வெளிநாட்டுக்கு அனுப்பி, ஏற்றுமதி இறக்குமதிகளையும் திறமையாக நடாத்தி வந்தவர் சின்னத்தங்கம்!

இந்தியாவிலுள்ள செட்டிநாட்டு முதலாளிகள் பலரும் வியாபாரம் சம்பந்தமாகக் கொடுக்கல், வாங்கல் பற்றிப் பேச்சுவார்த்தை நடாத்த வல்வெட்டித்துறைக்குச் சின்னத்தங்கத்திடம் வந்து போவார்கள்!

ஆனாலும்—

பெண் என்பதனால், இவரை ஏமாற்றிவிட முடியாது!

வியாபார தந்திரங்களையெல்லாம் நன்கு கற்றுவைத்திருந்தார்!

வல்வெட்டித்துறை சுந்தரலிங்கத்தின் பேத்தியார் தான் இந்தச் சின்னத்தங்கம்!

அதாவது, சுந்தரலிங்கத்தின் தகப்பனாரின் தாயார் தான் சின்னத்தங்கம்!

கப்பலில் செல்பவர்கள் மீண்டும் உயிரோடு திரும்பி வருவார்கள் என்பதெல்லாம் அப்போது கனவு.

திரும்பி வந்தால் காண வேண்டியதுதான்!

இப்படிக் கூறிவிட்டு, சீனிஅம்மான் என்ற சீனிவாசகம் ஒரு பாட்டைப் பாடினார்.

'பெஞ்சாதி பிள்ளையை வீட்டில் விட்டு
தங்கள் பேரையும் ரேவுத்துறையில் இட்டு
எண் சாண் உடம்பு வளர்க்கிற
கொடுமையால் யமனுக்கு ஒத்தி எழுதிவிட்டு
ஏறினார் கப்பலிலே!
வந்தவுடன் வாங்கினார் பற்றுச்சீட்டு'

அர்த்தம் நிறைந்த பாட்டு;

அந்தக்காலக் கப்பல் வாழ்வைப் படம்பிடித்துக் காட்டியது!



## 10

நமது 'அன்னபூரணி'க்கு ஏடனில் என்ன நடந்தது என்று அறிய நீங்கள் ஆவலாக இருக்கிறீர்கள் என்பதை என்னால் உணரமுடிகிறது!

ஏடனில் ஆறுமாதங்கள் எப்படிப் போனது என்பது இரத்தினசாமிக்கே ஆச்சரியமாக இருக்கிறது!

றொபின்சன் அமெரிக்காவுக்குச் சென்று, கூடவே தன் மனைவி புளொறினை அழைத்துக்கொண்டு ஏடன் வந்துசேர்ந்துவிட்டார்; அவருக்கு இப்போது தனி உற்சாகம்!

தம்பிப்பிள்ளைத் தண்டையலும் இலங்கையில் நீண்ட பொழுதைக் கழித்துவிட்டு ஏடன் வந்து சேர்ந்து விட்டார்! தில்லையம்பலமும், சுப்பிரமணியமும் வந்தார்கள்!

இனியென்ன,

பயணம் தொடரவேண்டியது தானே!

ஏடன் துறைமுகத்திலிருந்த ஒன்றரைமைல் தூரத்தில் 'அன்னபூரணி' நங்கூரமிட்டிருந்தாள்!

சாதனை வீரர் இரத்தினசாமியே இனிக் 'கதை'யைத் தொடர்கிறார்:

''ஆறுமாதத்தை ஏடனில் எப்படிக் கழித்தோம்? எப்படியோ பொழுதைப் போக்கினோம்!

''நானும், சபாரத்தினமும், சிதம்பரப்பிள்ளையும் சமைப்போம். கப்பலுக்குள்ளே இருக்கும் சிறுபடகை எடுத்து, தண்ணீரில் மிதக்கவிட்டுக், கரைக்குச் செல்வோம்.

''இப்படிச் செல்லும் போது, மூவரில் ஒருவர், கப்பலில் இருந்து கொள்வோம்.

''சோமாலியர்கள்தான் நாம் சுற்றிச் சென்ற இடங்களில் வாழ்ந்தார்கள்; பம்பாய் முதலாளிகளும் அங்கு வர்த்தகம் செய்து கொண்டிருந்தார்கள்.

''பேரீச்சம்பழம் குவித்து வைத்து விற்பார்கள்; நிறையளவு வாங்கிச்செல்வோம்; வயிறு நிறைய, ஆசைதீரச் சாப்பிடுவோம்.

ஆறுமாதங்களல்லவா? வெயிலின் கொடுமைக்குப் பாயும், குந்தானும் மற்றும் உபகரணங்களும் வெடித்து, உடைந்து பழுதடைந்து போகாத வண்ணம் அவற்றைக் கழற்றி வைத்திருந்தோம். 'டென்ற்' கூடாரத்தைக் கப்பலுக்குப் பாதுகாப்பாகப் போட்டிருந்தோம்.

''பதினைந்து நாட்களில், பயணத்தைத் தொடர்வதற்கு, கப்பலைத் தயாராக்கினோம்.

''குந்தானும், பறுவானும் ஏற்றப்பட்டது.

''அன்னபூரணி ஓடும்போருக்கு ஆயத்தமானாள்!

''றொபின்சனின் உதவியாளராக ஏடன்வரை வந்த என்ஜினியர் சுக் தனது ஊருக்குத் திரும்பிப் போய் விட்டார்.



''தம்பிப்பிள்ளை தண்டையல் தலைமையில் நம்மவர் ஆறுபேர்; றொபின்சனும், அவரது மனைவி புளொறினும் —எட்டுப்பேருடன் 'அன்னபூரணி' நீண்டகால ஓய்வுக்குப் பின் புறப்பட்டாள்.

''செங்கடல்—

''சிலவாரங்களில் சூடானைச் சென்றடைந்தோம்.

''சூடானைப் பற்றிச் சொல்ல வேண்டாமா?

''சூடான இடம்தான்! ஆயினும் ஏடனைவிடச் சூடு சற்றுக்குறைவுதான்.

''றொட்டியும், பேரீச்சம்பழமும், கொண்டல் கடலையும், வேண்டியளவு கிடைக்கும்.

''அராபியர்கள்தான் இங்கு வாழ்கிறார்கள்.

''சூடானில் நாற்பது நாட்களைக் கழித்தோம்.

''அடுத்து—

''சுயெஸ்! சுயெஸைப் போய்ச் சேர்வதற்கு எவ்வித கஷ்டமுமிருக்கவில்லை!

''சூடானில் சூடான சுவாத்தியத்தை அனுபவித்து அலுத்து அலுத்துப்போன எங்களுக்கு சுயெஸ் உடலுக்கும் உள்ளத்துக்கும் குளிர்ச்சியைத் தந்தது!

''ஆறுவாரங்கள் சுயெஸை சுற்றியடித்தோம்; அதன் குளிர்ச்சியில் எம்மை மறந்து இருந்தோம்.

''அங்கிருந்து இஸ்மாலியா துறைமுகத்துக்குச் சென்றோம்.

''சுயெஸிலிருந்து சூயஸ் கால்வாய்க்குள்ளேயே நேராக நுழைய வேண்டும.

''120 மைல்!

''அதாவது சூயஸ் கால்வாயின் நீளம்தான் அது! ஒரே நேரத்தில் ஒரு பெரிய கப்பல்—தான் அந்தக் கால்வாயால் செல்ல முடியும். அவ்வளவு குறுகிய அகலம் கொண்டது சூயஸ் கால்வாய்!

''மற்றொரு கப்பல் விலகுவதானால், ஒவ்வொரு சிலமைல் தூரத்துக்கும் 'ப'வடிவில் கால்வாயில் வெட்டப் பட்டுள்ளன.

''இரண்டு பக்கங்களிலும், வயல்களில் வேலை செய்து கொண்டிருப்பவர்களையும், இயற்கைக் காட்சிகளையும் பார்த்து ரசித்தபடியே சென்று கொண்டிருந்தோம்!

''சூயஸ் கால்வாய்க்குள் நுழையும்போது, ஒரு 'பயிலட்' ஏறிக்கொள்வார்; கால்வாய் முடியும்வரை, அவர் கப்பலுக்குள் இருப்பார்!

''குறுகிய அகலம் கொண்டதாக இந்தக் கால்வாய் இருப்பதால், பாதுகாப்பு நடவடிக்கைக்காக இப்படியெல்லாம் செய்யப்பட்டுள்ளன.

''சூயஸ் கால்வாயின் நடுப்பகுதியில்தான் இஸ்மாலியா இருக்கிறது.

''ஆயிரம் கதைபேசும் நைல்நதியைத் தனதாக்கி வைத்திருக்கும் எகிப்தின் துறைமுகம்—தான் இஸ்மாலியா.

''மன்னர் பாரூக்தான் அப்போது எகிப்தை ஆண்டு கொண்டிருந்தார். மன்னர் பாரூக்கின் ரூபத்தை நேரில் பார்க்கும் பாக்கியம் எங்களுக்குக் கிடைத்தது!

''இஸ்மாலியாவிலிருந்து எகிப்து நாட்டின் தலைநகரான கெய்ரோவுக்கு ரயிலில்தான் செல்லவேண்டும்.

''ஜென்சனும், டோரினும் கெய்ரோவுக்கு ரயிலில் செல்லும்படியே ஏற்பாடு செய்திருந்தனர்.



''கப்பலில் தாங்கள் இருவரும் இருப்பதாகக் கூறி, கெய்ரோவுக்கு எங்கள் ஆறுபேரையும் ரயிலில் ஏற்றிவிட்டார்கள்!

''நூறு மைல் தூரம்.

''கெய்ரோவில் எம்மையெல்லாம் சுற்றிக் காண்பிப்பதற்கும், தங்குவதற்கும் சகல ஏற்பாடுகளையும் ஜென்சன் அங்கு சென்றபோது எங்களுக்காகச் செய்திருந்தார்!

''ஜென்சனின் ஏற்பாட்டின்படி, ரயில் நிலையத்தில் அவரது நண்பர்கள் எங்களை வரவேற்று அழைத்துச் சென்றார்கள்!

''ஹோட்டலில் தங்கினோம்.

''மன்னர் பாரூக்கும், அரசியும் வீதி பவனி வந்து கொண்டிருந்தார்கள்.

''கண்குளிரப் பார்த்தோம்; என்றுமே மறக்க முடியாத ஒரு நிகழ்ச்சி.

''எகிப்து நாட்டில் நம்மை மயங்கவைத்த இன்னொன்று—

''நைல்நதி!

''நைல்நதி பற்றியும், படித்தும், கேள்விப்பட்டுமிருக்கிறேன்.

''நேரில்பார்த்தபோது—

''அந்த அழகில் என்னையே பறிகொடுத்தேன்! நான் கவிஞனாகப் பிறந்திருந்தால் ஓராயிரம் கவிதைகள் அந்த நைல்நதியைப் பற்றிப் பாடித் தள்ளியிருப்பேன்!

''நைல் நதியை என்னால் வர்ணிக்க முடியவில்லையே என்று கவலையாக உள்ளது.

''மன்னர் பாரூக்கின் திருமணத்தையொட்டி அப்போது நைல்நதி புதிய தோற்றமும், பொலிவும் பூண்டிருந்தது.

''ஓர் இரவு, அந்த நதி ஓரத்திலே இருந்து, நாங்கள் ஆறுபேரும் அமர்ந்து, கதைத்த நினைவுகள்

''ஏதோ ஒரு தனி உலகத்தில் மிதந்தோம்!

''வல்வெட்டித்துறையில் பிறந்த நாம், நைல்நதி ஓரத்திலே அமர்ந்திருந்து, அழகை ரசித்தோம்!

''—இன்னும் என் கண் எதிரே அந்த நைல்நதி ஓடிக்கொண்டுதானிருக்கிறது!

''எகிப்தில் இன்ெறாரு அற்புதம் கண்டோம்!

''உலக அற்புதங்களில் ஒன்றான பிரமிட்டுகள் எகிப்தில்தான் இருக்கிறது என்பதைச் சின்ன வயதில் புத்தகத்தில் படித்திருக்கிறேன்!

''இன்னும் சிறுவர்களும், பெரியவர்களும் அதனைப் பற்றிப் படித்துத் தெரிந்து வைத்திருக்கிறார்கள்.

''நேரில் எத்தனைபேர் பார்த்திருப்பார்கள்?

''கண்ணால் கண்டோம்! அந்த இடத்தைப் படமும் பிடித்துக்கொண்டோம்.

''மியூசியம், மிருகக்காட்சிச்சாலை, இப்படிக்கெய்ரோவில் பார்த்துப் பார்த்துப் பரவசத்தில் ஆழ்ந்தோம்.


''இஸ்மாலியாவுக்கு மீண்டும் வந்து சேர்ந்தோம்.

''நைல்நதியின் அழகில் மயங்கி, அதன் ஓரத்திலேயே காலமெல்லாம் இருந்து விடலாமோ என்ற ஏக்கம். இஸ்மாலியா வந்த பின்னரும் ஏக்கம் இருந்துகொண்டே இருந்தது.

''என்ன செய்வது?

'அன்னபூரணி' அமெரிக்கா போய்ச்சேர வேண்டாமா?





செட்டி நாட்டுக்குச் சொந்தமான அ. கு. அ கு. சோ. கா. என்ற 'நித்திய கல்யாணி' கப்பலுக்கு ராமாசாமித்தண்டையல், தண்டையலாக இருந்தபோது, செய்த சாதனைகள் சொல்லில் அடங்காது!

ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் தண்டையலாக இருந்த இவர்,

வல்வெட்டித்துறைக் கப்பலோட்டிகளுக்கு முன்னோடிகளில் ஒருவராக இருந்தாரென்பது குறிப்பிடத்தக்கது

முருகுப்பிள்ளை சின்னையா தண்டையல்,

வடிவேல் தண்டையல்,

செல்வமாணிக்கம் தண்டையல்,

இப்படிச் சில சாதனைத் தண்டையல்கள் நெஞ்சத்தில் நிழலாடுகிறார்கள்!

செல்வமாணிக்கம் தண்டையல்—

கடலுக்கே தன்னை அர்ப்பணித்த தியாகச் செம்மல்!

மலபாரிலிருந்து செட்டிநாட்டுக்குச் சொந்தமான கப்பலைச் செல்வமாணிக்கம் தண்டையல் கொழும்புத்துறை முகம் நோக்கிக் கொண்டு வந்து கொண்டிருந்தார்.

அந்தப் பயங்கரம்—

அப்போதுதான் நடந்தது!

முழுக்க முழுக்க வல்வெட்டித்துறைக் கடலோடிகள் தான் கப்பலில் பணியாற்றிக் கொண்டிருந்தார்கள்!

சூறுவளி—

கப்பல் மூழ்கி விட்டது! அவ்வளவுதான்!

கடலோடி வாழ்ந்தவர்கள், கடலோடு சங்கம மாஞர்கள்.

கண்கள் நனைகின்றன.

மாணிக்கவாசகம் தண்டையல்,

சிவகுருமூர்த்தித் தண்டையல்,

பொ. யோகமுத்துத் தண்டையல்,

ஆ. சுப்பிரமணியம் தண்டையல்,

செ. தில்லையம்பலம் தண்டையல்,

முத்துக்குமாரு தண்டையல்,

வ. இரத்தினசாமித் தண்டையல்,

இப்படிப் பட்டியல் நீண்டு கொண்டே போகிறது.

சிலரை நான் விட்டிருக்கலாம்.

ஆனல் அவர்கள் சாதனை செய்தவர்கள்.

கடைசியாக வாழ்ந்த சில தண்டையல்களைச் சந்தித்துப் பேசும் வாய்ப்பு எனக்குக் கிடைத்ததை என்றும் என்னல் மறக்க முடியாது.

26821



சிவசுப்பிரமணியம் தண்டையல், காத்துலிங்கம் தண்டையல், பொன்னுசாமித் தண்டையல் போன்றவர்களின் சந்திப்புக்கள் இதயம் மறக்காத அனுபவங்கள்.

காலமெல்லாம் கடலோடு கலந்து விளையாடிய அந்தக் கப்லோட்டிய தமிழன் சிவசுப்பிரமணியம் தண்டையலின் வாழ்வே சுவையானது.

அவர் காதுகளில் அணிந்திருந்த அழகிய சிவப்புக் கடுக்கன்கல்லுகள் என் நெஞ்சத்திரையில் இப்போதும் பளிச்சிடுகின்றன.

இராமசாமிப் பிள்ளையும், நடராசா வாத்தியாரும் இணைந்து கட்டிய அந்தக் கப்பலின் பெயர் திருநிலைநாயகி.

1937 ஆம் ஆண்டு கட்டப்பட்ட இக்கப்பலின் தண்டையலாக நியமிக்கப்பட்டார் சிவசுப்பிரமணியம் தண்டையல்!

கமாண்டிங் அப்பியரான்ஸ்! அதுதான் சிவசுப்பிரமணியத் தண்டையலின் பெருமை!

திருநிலைநாயகி கப்பலைக் கட்டிவித்தவர்களில் ஒருவரான நடராசாவாத்தியாரிடம் பல தகவல்களை அறிந்தேன்.

சிவசுப்பிரமணியம் தண்டையல் பதினைந்து ஆண்டு காலம் திருநிலை நாயகியில் பணியாற்றினர்.

நேர்மை—அவர் உடன் பிறப்பு.

நீண்டகாலம் ஒரு கப்பலில் தண்டையலாக இருந்த தன்ரகசியமும் இதுவே.

1956ம் ஆண்டு—

பசாலட்சுமி என்ற கப்பலில் தண்டையலாகப் பொறுப்பேற்றுர்.

அரேபியாவுக்குக் கப்பலோட்டியவர் சிவசுப்பிரமணியம் தண்டையல்!

மலபாருக்குக் கப்பலைக்கொண்டு சென்று, அங்கிருந்து அரேபியாத் துறைமுகத்துக்கு இருதடவை கப்பலோட்டிச் சென்றுள்ளார்.

மலபாரிலிருந்து அரேபியாவுக்குப் பதின்மூன்று நாளில் சென்றவர்,

மீண்டும் அரேபியாவிலிருந்து வல்வெட்டித்துறை திரும்பிவர அறுபத்திரண்டு நாள் எடுத்துவிட்டது!

பதினைந்து லட்சம் ரூபாய்க்கு வல்வெட்டித்துறை தங்கவடிவேல் மீன்பிடி 'ரோலர்' ஒன்றை இங்கிலாந்திலிருந்து வாங்கி வல்வெட்டித்துறையில் ஓட விட்டபோது—

அந்த வெளிநாட்டு ரோலருக்கு சிலகாலம் 'காப்டனாக'ப் பொறுப்பு வகித்து அதனை இயக்கியவர் இந்த சிவசுப்பிரமணியம் தண்டையல்!

பாக்கு நீரிணையை நீந்திக் கடந்து சாதனை செய்த வீரர் நவரத்தினசாமி நீச்சல் சாதனையை நிகழ்த்திய போது, அவருக்கு வழிகாட்டியாகக் கப்பலில் 'பயிலட்டாக'ச் சென்றவர் இந்தச் சிவசுப்பிரமணியம் தண்டையல்!

கொழும்புத்துறைமுகத்தில் பத்தாண்டுகளுக்கு முன்னர் கடமையாற்றிய குணசுந்தரம் என்ற வல்வெட்டித் துறையைச் சேர்ந்தவரைப்பற்றி குறிப்பிடாமல் இருக்க முடியாது!

'காப்டன்' தரத்தில் கப்பல் நுணுக்கங்களை முற்று முழுதாக கற்றுத்தேர்ந்தவர். அந்த சர்டிபிக்கற்றும் இவருக்குக் கிடைத்தது.

துறைமுகத்தில் இருந்து ஓய்வு பெற்ற பின்னர், 1967ம் ஆண்டு வல்வெட்டித்துறையிலுள்ள பிரபல வர்த்தகரான தங்கவடிவேலுவுடன் இவர் சேர்ந்துகொண்டார்.



குணசுந்தரத்தின் திறமையில் அளவற்ற நம்பிக்கை வைத்திருந்தார் தங்கவடிவேல்.

மீன்பிடித்தொழிலை பெரியளவில் செய்ய வேண்டுமென்ற நீண்டகால எண்ணத்தைச் செயல்படுத்த விரும்பிய தங்கவடிவேல் 'ரோலர்' ஒன்றை வாங்குவதற்காக இங்கிலாந்து சென்றார்-குணசுந்தரத்துடன்!

இங்கிலாந்தில் லிவர்ப்பூரில், கப்பல் கம்பனியொன்றிடமிருந்து பதினைந்து லட்சம் ரூபாய்க்கு ரோலரை வாங்கினார்கள!

தன்னந்தனியனாக, அரசின் உதவியுமின்றி தங்கவடிவேலு குணசுந்தரத்தின் மீதுள்ள திறமையின் நம்பிக்கையில் இந்த ரோலரை இவ்வளவு விலை கொடுத்து வாங்கினார்.

இலங்கையிலேயே தனிநபர் ஒருவர் இப்படியான ஒரு ரோலரை இவ்வளவு விலைகொடுத்து வாங்கிய பெருமை தங்கவடிவேலுவையே சாரும்!

அந்தக்கப்பலின் காப்டன் குணசுந்தரம்.

இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட ரோலர் ஆழ்கடலில் மீன் பிடித்தது. ஒரு வருடகாலம்—சோதனை நிறைந்த காலமாக இருந்தது அவர்களுக்கு.

தங்கவடிவேலு மனம் தளரவில்லை உலகத்தின் பல இடங்களுக்கும் சென்று வந்தவர் தங்கவடிவேலு எத்தனையோ லட்சம் ரூபாவை முடக்கிவிட்டோமே என்ற கவலை கூட இல்லாமல் சோதனை ஒன்றை நடாத்திய திருப்தியுடன் ரோலரின் கதையையும் முடித்துக்கொண்டார்.

இதன் பின்னர் குணசுந்தரம் கிரேக்கக் கப்பல் ஒன்றில் காப்டனுக்கு அடுத்தஸ்தானத்தில் சேர்ந்து கொண்டார்.

—கனடாவுக்குச் சமீபத்திலுள்ள ஆழ்கடலில் அந்தப் பயங்கரம் அவருக்கு நேர்ந்தது.

எண்ணெய் ஏற்றிக்கொண்டு வந்த அந்தக் கப்பலின் முக்கிய பாகமான 'கிராஸ்' உடைந்து கப்பல் இரண்டாகப் பிளந்தது!

—அபாய அறிவிப்பு அனுப்பப்பட்டது. ஆனாலும்—

கப்பலில் குணசுந்தரத்துடன் அனைவருமே கடலுக்குள் மூழ்கி இறந்துவிட்டதாகவே தகவல் வந்தது.

கடலோடு விளையாடிய குணசுந்தரத்தின் கதை கடலோடு முடிந்தது.

அவர் வாழ்வு முடிந்து மூன்றாண்டு கூட ஆகவில்லை.

அவர் பெற்ற புதல்வர்கள் இருவரும் வெளிநாட்டுக் கப்பலில் பணியாற்றச் சென்றுவிட்டார்கள்.

புலிக்குப் பிறந்தவர்கள் பூனையாவார்களா?






இஸ்மாலியாவிலிருந்து சூயஸ் கால்வாய் முடிவான இடத்திலுள்ள 'போர்ட்செயிட்'டை 'அன்னபூரணி' சென்றடைந்தாள்.

அங்கிருந்து புறப்பட்ட மூன்றாவது நாள் அந்தப் பயங்கரம் எதிர்நோக்கும் என்று எவருமே அந்த நேரம் வரை எதிர்பார்க்கவேயில்லை!

ஆம்—

அந்தப் பயங்கரம் நடந்தே விட்டது!

''நாம் முடிந்தோம் என்ற முடிவைத் தவிர எம்மால் வேறொன்றுமே நினைக்க முடியவில்லை!'' என்று அந்த பயங்கர நினைவை இரை மீட்டார் இரத்தினசாமி.

''சூறாவளி.

''அன்னபூரணி போய்க்கொண்டிருந்த பக்கத்திலிருந்து எதிர்த்திசை நோக்கி, கட்டுமீறிக் கட்டுக்கடங்காது பாயத் தொடங்கியது!

''அதிர்ந்து போனோம்.

''நாலா பக்கத்திலிருந்தும் காற்று பயங்கரமாக வீசிக் கொண்டிருந்தது என்பதை மட்டும் உணரமுடிந்தது.

''அடுத்து என்ன நடக்கப் போகிறதோ என்பதைத் தெரிந்துகொள்ள முடியாதவர்களாக,

''உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு என்ன செய்வதென்று தெரியாமல் பதறிக்கொண்டிருந்தோம்.

''காற்றோடு காற்றாகத், தனது எண்ணப்படி கப்பல் போய்க்கொண்டிருந்தது; பாயைக் குறைத்தோம்.

''ஆனாலும் காற்றின் வேகத்துக்கு ஈடுகொடுக்கமுடியாமல், பாய் கிழிந்து கொண்டிருந்தது. சூறாவளி கப்பலை மூழ்கடித்து விடுமோ என்ற அச்சம்!

''ஒரு பகலும், ஒரு இரவும் கப்பல் போகிற பக்கம் போகட்டும் என்று இருந்தோம். இருநூறு மைல்களுக்கு அடித்து வரப்பட்டோம்!

''இப்போது ஓரளவு இயற்கையின் தாண்டவம் குறைந்து விட்டது!

''ஓரிடத்தில்—

''லெட்' ஒன்றில், கயிற்றைக் கட்டி அதன் மூலம் ஆழத்தைப் பார்க்கும் முறையில், ஆழத்தின் உயரத்தைக் கணித்தோம்.

''84 அடி

''நங்கூரமிட்டுக் கப்பலை குறிப்பிட்ட இடத்தில் கப்பலை நிறுத்துவதற்கு அதுதான் சரியான இடம் என்பதைக் கணித்துக் கொண்டோம்.

''அந்த இடத்தில் கப்பலை நங்கூரமிட்டுக் கொண்டோம்.



''கைபா என்ற இடம்தான் அது. பெய்ரூட்டிலிருந்து இருபத்தைந்து மைல் தூரத்தில் இருந்தது கைபா!

''விடிந்து விட்டது.

''அலையும், பேரலையும் ஓரளவு ஓய்ந்துவிட்டது.

''பெய்ரூட் துறைமுகத்துக்குக் கப்பலைக் கொண்டு சென்றோம்.

''பாய் கிழிந்து, பலவிதமான சேதங்களுடன், பெய்ரூட் துறைமுகத்தில் 'அன்னபூரணி' நின்றுகொண்டிருந்தாள்.

''கப்பல் பயணத்தின்போது, நாங்கள் போதியளவு 'கன்வஸ்' துணியைக்கொண்டு சென்றோம் இதனால் கிழிந்த பாய்களை மாற்றி அமைத்து, பாதிக்கப்பட்ட பகுதிகளைத் திருத்திச் செப்பனிட்டுக்கொண்டு,

''மீண்டும் புறப்பட்டோம்!

''துறைமுகத்திலிருந்து புறப்பட்டு, சில மைல் தூரங்கள் சென்றபின்னர்தான் காலநிலை இன்னமும் சீராகவில்லை என்பதை உணர்ந்து கொண்டோம்.

''பெய்ரூட் துறைமுகத்துக்கே மீண்டும் சென்றோம்.

''பெய்ரூட் துறைமுகத்தில் இறங்கிவிட்டோம்; பெய்ரூட்டைச் சுற்றிப் பார்க்கும் ஆசை எனக்கு ஏற்பட்டு விட்டது! நண்பர்களுடன் வெளியே சென்றேன்.

''அமெரிக்கா யூனிவர்ஸிட்டி ஒவ் பெய்ரூட்'டைப் பார்த்தோம்; அங்கு படிக்கிற பையன்கள் எங்களைச் சுற்றிக் காண்பித்தார்கள்.

''இலங்கையர் என்பதை மட்டுமல்ல, வல்வெட்டித் துறை என்ற இடத்திலிருந்து வந்திருப்பதையும் அவர்களிடம் சொன்னோம்.

''எங்கள் துணிவைப் பாராட்டினார்கள்.

''அந்தப் பல்கலைக்கழகத்திலுள்ள விரிவுரையாளர்கள் சிலரைச் சந்தித்துப் பேசினோம். நம் நாட்டைப்பற்றியே துருவித்துருவிக் கேட்டார்கள்.

''பெய்ரூட்டிலிருந்து புறப்பட்டோம்.

''கப்பலுக்குள் ஒருவர் நோய்வாய்ப்பட்டார்.

''போர்ட் செட்டிலிருந்து புறப்படும்போது அந்தக் கடலில் நன்கு பழக்கப்பட்டவரான 'பயிலட்' சக்காலியா என்பவர்தான் எங்களுடன் ரொபின்சனின் ஏற்பாட்டின்படி வந்தார்; அவர்தான் மிகவும் சுகயீனம் அடைந்தார். சூறு வளியின்போது, அவர் உடல் பாதிக்கப்பட்டுவிட்டது.

''எழுபது வயது அப்போது அவருக்கு; முதுமை எல்லாம் சேர்ந்து அவரை இந்த நேரம் பார்த்து நோய் வாய்ப்படுத்திவிட்டது!

''பெய்ரூட்டிலிருந்து புறப்பட்ட நாம் கிறீட் போய்ச் சேர்ந்ததும், சக்காலியாவை ஆஸ்பத்திரியில் அனுமதித் தோம்.

''சக்காலியா இனிக் கடல் பிரயாணம் செய்யக் கூடாதெனக் கண்டிப்பான உத்தரவை டாக்டர் போட்டு விட்டார்!

''டொனல்ட் மக்கூஸ் என்ற மற்றும் ஒருவரை அழைத்துச் சென்றோம்.

கிறீட்டிலிருந்து ஜிபிரோல்டருக்கு—

அத்திலாந்திக் சமுத்திரத்தைக் கடக்கவேண்டும். மிகச் சோதனையான கட்டம்!



பாயின் உதவியுடன் அத்திலாந்திக் சமுத்திரத்தைக் கடப்பது சுலபமான காரியமா?

ஜிபிரோல்டர் துறைமுகத்தை 'அன்னபூரணி' சென் றடைந்தாள்!

அப்போது—

'ஸ்பானிஷ்—பிராங்கோ' கலவரம் நடந்துகொண்டி ருந்தது!

ஜிபிரோல்டரில் தில்லையம்பலம் இலங்கைக்குத் திரும் பினார்; மேலும் ஒருவர் குறைந்துவிட்டார்!

ஏடனில் ஏற்கனவே சேது நவரத்தினராசா, இலங்கை சென்று திரும்பவில்லை!

ஜிபிரோல்டரிலிருந்து புறப்படும்போது,

'ஸ்பானிஷ் – பிராங்கோ' கலவரத்தில் ஈடுபட்ட அமெ ரிக்கன் ஒருவன் கப்பலுக்குள் ஏறிக்கொண்டான்!

கைதியாக இருந்து, அவர்கள் பிடியிலிருந்து, தப்பி ஓடி வந்தவன்! ஜிபிரோல்டரிலுள்ள அமெரிக்கத் தூதரக அதிகாரிகள் மூலமாக எங்கள் கப்பலுடன் தொடர்பு கொண் டான். ரொபின்சனின் சம்மதத்தோடு, அந்த அமெரிக்கனை தப்பிட்பில் ஊ ட்ண் டைல் ஏற்றிக்கொண்டார்!

பயங்கர வெடிச்சத்தம்!

ஸ்பெயினுக்குச் சொந்தமான 'பிளீட்' ஒன்று வந்து கொண்டிருந்தது!

'அன்னபூரணி'யைச் சுக்குநூறாக்க ஒரேஒரு விநாடி போதும், அந்த பிளீட்டுக்கு!

—அன்னபூரணி கொடியை இறக்கு மரியாதை செலுத் தினாள்!

ஒரு தடவையல்ல, பலதடவை கொடியை இழுத்து, இழுத்து 'சல்யூட்' செய்யப்பட்டது!

கிட்டவந்த ஸ்பெயின் வீரர்கள் "ஆயுதங்கள் கொண்டு போறியளா? என்ன விஷயம்?" என்று கேட்டார்கள்.

அன்னபூரணியின் மேல்தளத்தில்—

இரத்தினசாமிதான் அப்போது நின்றுகொண்டிருந்தார்!

ஆங்கிலத்தில், அவர்களுக்குப் பதில் சொன்னார் இரத்தினசாமி!

பயணத்தின் நோக்கம் பற்றி விளக்கினார்கள்!

விட்டுவிட்டார்கள்.

அடுத்த 'கண்டமும்' அன்னபூரணிக்குக் கழிந்து விட்டது!

கனேரியாத் தீவுகளைத் தாண்டி விட்டார்கள்!






பேர்மியூடா.

அமெரிக்கச் செல்வந்தர்களின் சுகபோகத்துக்கான சொர்க்கபூமி.

அமெரிக்கர்கள் விடுதலையை தங்கள் இதயம் கவர்ந்த இனியவர்களுடனும், பிள்ளைகளுடனும் கழித்துச் செல்வார்கள்.

குளிர்ச்சியான பிரதேசம்.

அமெரிக்கச் செல்வந்தர்கள் மாடமாளிகை கட்டி வைத்திருக்கிறார்கள்.

இந்த இடத்திலிருப்பவர்கள், இஸ்லாமியாவிலிருந்து, ஆண்டாண்டு காலத்துக்கு முன்னர் அடிமைகளாகக் கொண்டு வரப்பட்டவர்களாம்!

தமது மூதாதையரின் இடம் அதுதான் என்பதை நன்கு தெரிந்து வைத்திருக்கிறார்கள்.

இஸ்மாலியாவிலிருந்து 'அன்னபூரணி' புறப்படும் போது, கப்பல் கடலில் ஆட்டம் காணாத விதத்தில், அங்கு நிறையளவு மண்மூடைகளை கட்டிக் கப்பலில் போடப்பட்டிருந்தது.

இஸ்மாலியா மண் தான் அது என்பதை அவர்கள் தெரிந்துகொண்டபோது ஆனந்தக் கூத்தாடினார்கள்!

சாக்குகளிலிருந்து கைநிறைய மண்ணை எடுத்துச் சென்றார்கள்!

தாயகத்தின் மண்ணை எடுத்து முத்தமிட்டார்கள்!

பேர்மியூடாவில் நூற்றுக்கணக்கான அழகுத் தீவுகள்!

பேர்மியூடாவிலிருந்து பயணம் தொடர்ந்தது!

'அன்னபூரணி அம்மாள்' அமெரிக்காவைச் சென்றடைய இன்னும் இருந்த இடைவெளித்தூரம்–

அறுநூறு மைல்கள்!

எத்தனை சவால்கள்–

எத்தனை இடர்கள்—

உயிரையே துச்சமென மதித்து, பயங்கரப் பயணத்தை நடாத்தி, இன்னும் அவர்கள் அடையவேண்டிய தூரம் ஆக அறுநூறு மைல்கள் தான்!

இதற்கு முன்பாக—

போட்செட் துறைமுகத்தில் 'அன்னபூரணி' தரித்து

நின்றபோது—

சந்தோஷமான ஒரு சமாச்சாரம்தான்!

றொபின்சன் மகிழ்ச்சியால் துள்ளிக் குதித்தார்! அவருக்கு இபபோது இரட்டிப்பு மகிழ்ச்சி!



'அன்னபூரணி' அமெரிக்கா சேரப்போகிறாள்!

அதே நேரத்தில்—

தனது இனியவள் ஒரு குழந்தைக்குத் தாயாகிவிட்ட செய்தி அவருக்கு தேனாக இனித்தது!

வல்வெட்டித்துறை கடலோடிகளும் றொபின்சன் மகிழ்ச்சியில் கலந்து கொண்டார்கள்!

"றொபின்சன் தனது மனைவியுடன் 'போட்செட்'டிலிருந்து விமானத்தில் பறந்து சென்று விட்டார்!

அமெரிக்காவில் அன்னபூரணியை வரவேற்க ஏற்பாடுகளைச் செய்வதும் ஒரு நோக்கம!

ஒன்றரை வருடகாலத்துக்கு மேலான நீண்ட பயணம்—

றொபின்சன் என்ற அமெரிக்கர் நினைத்ததை வல்வெட்டித்துறைக் கடலோடிகள செய்து முடிததுச் சாதனை நிலை நாட்டி விட்டார்கள்!

அமெரிக்காவின் பிரசித்திபெற்ற குளோசெஸ்ரர் துறை

முகத்தில் எக்கச்சக்கமான வரவேற்பு—

'அன்னபூரணி' நங்கூரமிட்டி நந்த இடத்திற்கு ஏராளமான அமெரிக்கர்கள் வந்து சேர்நதார்கள்!

அன்னபூரணிக்குள் ஏராளமான கூட்டம்!

கப்பலைச் சுற்றிப் பார்த்தார்கள்!

தம்பிப்பிள்ளைத் தண்டையலையும் மற்றைய கடலோடிகளையும் கேள்வி கேள்வி கேட்டு, அன்புத் 'தொல்லை' கொடுத்தார்கள்!

திணறிப்போய்விட்டார்கள்- அமெரிக்கர்கள் கொடுத்த அன்புத் தொல்லையில்!

வல்வெட்டித்துறைக் கடலோடிகளின் சுவையான பேட்டிகள், செய்திகள் அமெரிக்கப் பத்திரிகைகளில் வெளியாகின.

றொபின்சன் செல்வத்தில் புரளுபவர்!

அவரும், அவர் மனைவியும் அன்னபூரணியை அமெரிக்கா கொண்டு வந்து சேர்த்தவர்களுக்கு ராஜமரியாதை அளித்தார்கள்!

அமெரிக்காவின் முக்கிய இடங்களை யெல்லாம்/அவர்கள் பார்ப்பதற்கு ஏற்பாடுகளை றொபின்சன் செய்து கொடுத்தார்!

நியூயோர்க்கை மூன்று தினங்கள் சுற்றிப்பார்த்தனர்!

அமெரிக்காவில் அவர்கள் சில தினங்கள் கழித்தனர்!

நெஞ்சத்தை விட்டகலாத அமெரிக்க நினைவுகளுடன்—

தம்பிப்பிள்ளைத்தண்டையலும், மற்றும் கடலோடிகளும்,

அமெரிக்காவிலிருந்து விடைபெற்றுக்கொண்டனர்! நீராவிக்கப்பலில் சிங்கப்பூர் வழியாக நாடு திரும்பினார்கள்!



மகளுடன் ஆசிரியர்

அரைக் காற்சட்டை அணிந்த பதினேழு வயது மாணவனாக இருந்தபோதே 'விவேகி' மாத சஞ்சிகையின் ஆசிரியரானார். அப்போதே, கண்டி 'செய்தி' வார ஏடுக்கு யாழ். நிருபர்.

பின்னர்... 'ஈழநாடு' உதவி ஆசிரியர்... அதனைத் தொடர்ந்து 'தினகரன்' உதவி ஆசிரியர்... அப்புறம் லண்டனில் சில காலம். இப்போது 'ஈழநாடு' சிரேஷ்ட உதவி ஆசிரியர்!

அரசியல், இலக்கியம், கலை, சினிமா மட்டுமல்ல; பத்திரிகைத் துறையின் 'நான்கு சுவர்'களும் இவர்க்குத் தெரியும்.

பெயர் **இளையதம்பி குமாரசாமி ராஜகோபால்** தான். ஆனால் இவர் உலவி வருவது... 'மகரந்தம்' தேனி, பாமா, ராகி, 'இலக்கிய உலகம்' ரங்கன் தேசிகன், ஏ. கே. ஆர், ஷர்மினி..!

நண்பன் ராஜகோபால் எழுதியிருக்கும் இந்நூல், ஒரு உண்மை வரலாறு மட்டுமல்ல ஈழத் தமிழனுக்கு கிடைத்திருக்கும் மற்றுமொரு சொத்து! அழிய விடாமல், பாதுகாக்கப்பட வேண்டும்.

— கே. ஜி. மகாதேவா
(செய்தி ஆசிரியர்—ஈழநாடு)
27-09-1984